
ISSN: 2012-6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி



50/=

ஜனவரி - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜனவரி – 2017

மலர் - 48 இதழ் - 12



**ஆசிரியர்**

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

**இணை ஆசிரியர்**

மெற்றில்டா இராஜேந்திரம்

**துணை ஆசிரியர்**

பெஸ்லியோ வாஸ்

**கணினி வடிவமைப்பு**

சுபாஜெனி சங்கர்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

மட்டக்களப்பு மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் – 44

மட்டக்களப்பு.


**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,

திருமலை வீதி,

மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .................. 01

பத்தாண்டு நல்வாழ்த்து ................. 02

எண்ணிப்பார்க்கையில் .................. 03

அன்னை மரியாள் ......................... 04

புனித ஜோசப்வாஸ் ........................ 05

குறுங்கதை .................................... 07

தைத் திருமகளே வா வா ............. 08

கத்தோலிக்கத் திருமறை .............. 09

புதியதோர் இறைஇரக்கத் ............ 10

புத்தாண்டே புனிதமாய் வா .......... 11

இதுதான் அரசியல் ........................ 12

ஜெயலலிதா முதல்வர் ................... 13

மருத்துவம் ..................................... 14

திருஅவைச் செய்திகள் ................. 15

ஒரு புள்ளியில் சந்திக்கும் ............ 16

உலகெங்கும் மரியாள் ................... 17

கடுகுக் கதை ................................. 18

மாணவர் பக்கம் ............................. 19

புனிதர்களை அறிவோம் ............... 21

இலக்கிய மஞ்சரி .......................... 22

பொங்கல் ........................................ 23

மரியாள் இறைவனின தாய் .......... 24

சின்ன விசயங்கள் சிறந்த ............ 26

திருவிவிலியம் கற்போம் ............... 27

அறிவை வளர்ப்போம் .................... 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P. O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

E.mail: battiscc@gmail.com


விலை : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன்

உங்களோடு....

அன்புமிக்க தொண்டன் வாசகர்களே! மலர்ந்திருக்கும் புத்தாண்டில் உங்களிலும், உங்கள் இல்லங்களிலும் இறை இயேசுவின் அன்பும் ஆசிர்வாதமும் நிறைந்திருக்கட்டும். அனைவருக்கும் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.


இறைமகன் இயேசுவை
தன் கருவறையில் சுமந்து
பத்து திங்கள் கண்விழித்து
இறை ஆவியின் வல்லமையால்
இன்னல்கள் நடுவினிலும்
நான் சோர்ந்து போகமாட்டேன்
என்று நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு
இறை இயேசுவை நாம் அன்புசெய்ய
எம் கரங்களுக்கு ஈந்தளித்த
தெய்வத் தாய் அன்னை மரியாள்.

அன்னை மரியாள் உலகத்தின் தாய். நாம் வாழும் உலகில் நம்மை மீட்க மீட்பரைத் தந்த தாய். அன்பின் இருப்பிடமான அன்னை மரியாள் இறைவனின் வார்த்தைக்கு "இதோ ஆண்டவரின் அடிமை" என தன்னை அர்ப்பணித்த அர்ப்பணத்தின் தாய். புதுமைகள் செய்திட வித்திட்ட அற்புதத்தின் தாய். இன்னலுறுவோரின் வேதனை போக்கிடும் ஆறுதலின் தாய். அந்த அன்னைக்கு நாம் அனைவரும் அன்புக் குழந்தைகள். ஏனெனில், இறைமகன் இயேசு கல்வாரியில் கடைசி நிமிடத்துளிகள் தம் தாயை உங்கள் அனைவரது தாய் என்று நமக்குத் தம் அன்னையை நம் அன்னையாகத் தந்திருக்கிறார். அன்னை மரியாள் இயேசுவின் சீடர்களோடு தம் மகனின் ஊழியப் பாதைக்கு உறுதுணையாக இருந்த தாய், தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட தாய். இந்தத் தாய் நம் அனைவரது குடும்பத்திலும் மகிழ்ச்சியையும், ஆசிர்வாதத்தையும் அள்ளி வழங்குகின்ற தாய்.

அப்படி சக்தி வாய்ந்த அன்னையை நோக்கி நாம் அனுதினமும் கபிரியேல் வானதூதர் வாழ்த்தரைத்து கூறிய "அருள் நிறைந்த மரியே வாழ்க" எனும் ஜெபத்தை ஜெபித்து ஜெயமான வாழ்வு வாழ வேண்டும். அன்னையிடத்தில் தஞ்சம் புகுந்த யாவரையும் அன்னை கைவிடாது அரவணைத்துப் பாதுகாக்கின்றார். அந்த அன்னையை நாம் அன்னை வேளாங்கண்ணி என்று அன்னையின் அற்புதத்தை ஜெபித்து பலன் பெற்றவர்களாய் வாழ்ந்துகொண்டிருப்போம். அன்னை மரியாளை நோக்கி ஜெபிப்பதனால் ஆசிர்வாதம் நிறைந்த வாழ்வாய் நம் வாழ்வு செழித்தோங்கும். ஏனெனில், மூவொரு கடவுளால் அர்ச்சிக்கப்பட்ட தாய். அந்தத் தாயின் அன்பு உலகைவிடப் பெரியது. தம் மகனை நமக்காகச் சிலுவை மரணம் வரை அர்ப்பணித்த அன்பு. தம் ஒரே மகனை நமக்காய்த் தந்திட்ட அன்னையை நோக்கி நாம் அன்பு செய்து வாழ்க்கையில் ஜெயம் பெறும் பிள்ளைகளாக மாற வேண்டும்.

மலர்ந்திருக்கும் இப்புதிய ஆண்டில் நம் வாழ்க்கையை அன்னை மரியாளிடத்தில் ஒப்புக் கொடுப்போம். அனுதினமும் அன்னையை நோக்கிப் பரிந்துரை ஜெபம் கேட்டுப் பலன் பெறுவோம். மூவொரு கடவுளின் அன்பிற்காகவும், ஆசிர்வாதத்திற்காகவும் நம் இல்லங்களிலும், நாட்டிலும் சமாதானம் வேண்டியும், அன்னையிடத்தில் ஜெபம் கேட்டு சமாதானம் நிறைந்த மனங்களோடு வாழ்ந்து ஜெயம் பெறுவோம். இறை ஆசீரால் நிறைந்திடுவோம். மூவொரு கடவுளின் அன்பும், அன்னை மரியாளின் அன்பும் நம் அனைவருக்கும் இப் புதிய ஆண்டில் புதுப் பொலிவாய் நிறைந்திருக்கட்டும்.

– அதிபர் –




"பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்:
உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!"

– லூக்கா 1:42 –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மறைமாநில ஆயர் மேதகு. கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகையின் புத்தாண்டுச் செய்தி



# புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

இன்று ஆண்டின் முதல் நாள். இயேசு பிறந்து எட்டாம் நாள். அன்னை மரியாவை **"ஆண்டவரின் தாய்"** என்று அறிக்கையிட்டுக் கொண்டாடவும், அவரது பரிந்துரையில் பலன் பெற்று வாழவும் திருச்சபை உலக மக்களை அழைக்கிறது. **"ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக. ஆண்டவர் தம் திரு முகத்தை உம் மேல் ஒளிரச் செய்து உன் மீது அருள் பொழிவாராக"** (எண். *6:24-26*) என்னும் பழைய ஏற்பாட்டுக் குருமரபினரின் வாழ்த்தைத் தமதாக்கி, புத்தாண்டைத் தமது வாழ்த்துக்களுடன் தொடங்கத் திருச்சபை நம்மை அழைக்கின்றது.

பசுவை அது தரும் பாலுக்காகவும், நிலவை அது தரும் குளிர்ச்சிக்காகவும், தென்னையை அது தரும் இளநீருக்காகவும், பூவை அது தரும் மணத்திற் காகவும் புகழும்போது, மரியாவை எல்லாம்வல்ல இறைவனுடைய இரண்டாம் ஆளாகிய சுதனாகிய கடவுளைப் பெற்றெடுத்த தற்காக **"இறைவனின் தாயே"** என்று அழைப்பதில் எந்தத் தவறும் இல்லை என்பது நமது விசுவாசம். சிலுவையடியில் நின்ற தம் அன்புச் சீடரிடம் **"இவரே உம் தாய்"** (யோவா *19:26*) என்று இயேசுவைத் தம் இறுதிச் சாசனத்தில் கூறியதன் வழியாக அன்னை மரியா வாழும் மனிதர் அனைவரின் ஆவிக்குரிய வாழ்வின் தாயாகிறார்.

"மரியா உண்மையாகவே இறைவனும், மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப்பெற்று போற்றப்பெறுகிறார்" (திருச்சபை எண். *53*) என்றும், **"தூய கன்னி மரியா இறைவனின் தாய் என்னும் கொடையாலும், அலுவலாலும், மீட்பரான தன் மகனுடன் ஒன்றித்துள்ளார்"**. (திருச்சபை எண். *63*) என்றும் அறிக்கையிடுகிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம். நம் தாய் மரியா **"நான் இருக்கிறேன், பயப்படாதே"** என்று கூறுவதால் புத்தாண்டில் வானகத் தந்தை யின் கொடைகளும், ஆசீரும் மரியாளின் பரிந்துரையால் நமக்கு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை 2017ம் ஆண்டைப் புனித ஜோசப்வாஸ் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, இந்த அண்டிலே நாம் முன் னெடுக்கக்கூடிய செயற்திட்ட முன்மொழிவு களைத் தந்துள்ளது. அந்த வகையில் எமது மறைமாநிலத்திலும் நடைபெற்ற மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபையின் பொது அமர்வின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடிப்ப டையாகக் கொண்டு, இந்த ஆண்டிற்கான சுற்று மடலை உங்கள் முன் வைத்துள்ளோம். அதனை மையமாகக் கொண்டு எமது விசுவாசப் பயணத்தைத் தொடங்குவோம்.

திருச்சபைப் போதனைகளுடன், திருக் குடும்ப மாதிரியைப் பின்பற்றிக் கடைப்பிடித்து மாண்புடன் விளங்கி வந்த திருமணமும், குடும்பமும் இன்றைய தொடர்புச் சாதனங்கள், நவீன வாழ்க்கை முறை, பொருளாதாரச் சுமை, நுகர்வுக் கலாச்சாரம், சுகம் தேடும் வேட்கை, சுயநலப் போக்கு போன்றவைகளால் கடுமை யான தாக்குதலுக்குள்ளாகியுள்ள குடும்பங்க ளின் சீரழிவைத் தடுத்துக் குடும்பங்களைக் கட்டியெழுப்பி நற்செய்தி அறிவிப்புப் பணியின் சிறப்பான இடமாக்கத் திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய **"அன்பின் மகிழ்ச்சி"** என்ற திருமடலை ஆழமாகக் கற்றுக்கொள்வோம்.

பிறந்திருக்கும் புத்தாண்டைப் புத்தெழுச்சி யோடு வரவேற்போம். புதிதாகச் சிந்தித்துப் புது வாழ்வு வாழ முனைவோம். அன்பால், பாசத் தால், செபத்தால், தியாகத்தால், விட்டுக்கொடுத் தலால், மன்னித்தலால், மனித நேயத்தால், இறை பக்தியால் மகிழ்ச்சி நிறைந்த குடும்பங்க ளைக் கட்டியெழுப்புவோம்.

அன்பு என்ற சுருதி உங்கள் குடும்பத் தின் ஆதார சுருதியாகட்டும். அன்பும், பண்பும் கலந்த கலவையைப் பாசம், பகிர்வு என்ற நீரில் குழைத்து, கட்டுப்பாடு - திட்டமிடல் என்ற வரை படமிட்டுக் கட்டி முடிக்கப்படும் உறுதியான கட்டிடமாக இருக்கட்டும் உங்கள் குடும்பம்.

- அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் -

- பேரருட்தந்தை. ஜோசப் பொன்னையா
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.

## எண்ணிப்பார்க்கையில்...

**எழுது கருவியா? அழி கருவியா?**



ஒருமுறை கிடைப்பதுதான்
மனித வாழ்க்கை
அதில் அடுத்தவர்க்காக
வாழும்போது
நன்மை பிறக்கிறது
நலனும் விளைகிறது.
நம் வக்கிர சிந்தனைகள் அடுத்தவர்
வாழ்வை, நற்பெயரை
அழிப்பது என்பது அபத்தமானது!
அனைவரும் இன்புற்று வாழ
நாம் ஆசிப்பது
எல்லோருக்கும் சிறப்பைத் தரும்!
இது பற்றி எண்ணிப்பார்க்கையில்...
பிறர் வாழ்வில் மகிழ்ச்சியை எழுதும்
பேனாவாக நாம் அமைய
முடியா போனாலும் அவர் தம்
துயரங்களைப் போக்கும்
அழி கருவியாகவாவது அமைவது
மேலானது என்பது மனதிற்குத்
தெரியவரும்.

ஆனந்தா ஏ.ஜி.இராஜேந்திரம்

**நோயும் பிணியும் மனிதனை விழுங்கக் காரணம்**
**இயற்கை சீறி மனிதனை அழிக்கக் காரணம்**
**எங்கும் எப்போதும் தவறு நடக்கக் காரணம்**
**காரணம் மனிதன் ஒருவனே அன்றி வேறில்லை.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு புலர்ந்துவிட்டது. அன்னை மரியாளை நம் அன்பு வழிகாட்டியாகத் திருச்சபை அன்னை எமக்குத் தந்துள்ளது. இவ்வாண்டு முழுவதும் எமது வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், இன்னலிலும் எமக்கு அடைக்கலமாய் இருப்பவள் அன்னை மரியாள். 2017ம் ஆண்டு எப்படி இருக்கப் போகிறதோ? அகிலத்திலும், நம் நாட்டிலும், வீட்டிலும் என்ன நடக்குமோ? எனச் சிந்திக்கும் எம்மைக் கரம் பிடித்து வழிகாட்டப் போகிறவள் எம் அன்னை; அந்த அன்புத் தாய் தன்னை அண்டி வருவோரைக் கைவிடாத நாயகியாவார்.

அன்றொருநாள் கபிரியேல் தேவதூதன் மரியாளிடம் இயேசுவின் தாயாகப்போகவிருக்கும் நல்ல செய்தியைச் சொல்லச் சென்றபோது சில வினாக்களுக்கு விடைகளை அறிந்ததும் "இறை சித்தம் போலாகட்டும்" எனக் கூறியவள். எம் வாழ்விலும் நாம் எதிர்கொள்ளப்போகும் சவால்களுக்கு 'ஆகட்டும்' எனக் கூறி அவற்றிற்கு முகம் கொடுக்கத் துணைபுரியப் போகின்றவள் எம் அன்னை. அதுமட்டுமல்ல, பல வடிவங்களில் இறை செய்தி எமக்கு வரும். எமது உதவி தேடிவரும் அண்டை வீட்டார், பசியோடு வரும் பரம ஏழை, தாகத்தோடு வரும் ஒருவர், இவ்வாறு பல வடிவங்களின் இறை செய்தி எமக்குக் கிடைக்கும். நாமும் அன்னை மரியாள் போல் 'அவர் சித்தம்' என ஏற்றுக்கொள்வோம். எம் தாய் தன்னிடத்தில் உருவாகிக் கொண்டிருந்த இயேசுவைப் பற்றிய நல்ல செய்தியைத் தன் உறவினள் எலிசபெத்துடன் பகிர்ந்துகொண்டாள். தூய லூக்கா நற்செய்தி 1ம் அதிகாரம் 39 முதல் 45 வரையிலான திருவசனங்களில் இந்நிகழ்வு பகிரப்படுகிறது. "மரியா புறப்பட்டு யூதேயா மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்.

- அருட்சகோதரி லூர்ட்ஸ் F.M.M. -



# அன்னை மரியாள் அன்பு வழிகாட்டி

அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத் கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில் "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே. என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றுனுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்" என்றார். இப்புத்தாண்டிலே அகிலமெங்கும், விசேஷமாய் எமது நாட்டிலும், வீட்டிலும் சண்டை சச்சரவுகள் நீங்கி உண்மையான அமைதி நிலவ அன்னையிடம் பக்தியுடன் வேண்டிடுவோம். நாமும் அமைதியின் தூதர்களாக மாறிடுவோம். நிமிர்ந்து நின்று நீதி நேர்மைக்காக அயராது உழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஜோசப்வாஸ்



➢ இலங்கை ஆயர் பேரவை 2017ம் ஆண்டை புனித ஜோசப்வாஸ் ஆண்டாக *(20.11.2016)* கிறிஸ்து அரசர் பெருவிழா அன்று பிரகடனப்படுத்தியுள்ளது.

➢ *14.01.2015* அன்று திருத்தந்தை பிரான்சிஸ் புனித ஜோசப்வாஸ் அடிகளாரை இலங்கை மண்ணின் முதல் புனிதராக உயர்த்தினார். எமது நீண்டகால ஏக்கத்தை நிறைவேற்றினார். கனவை நனவாக்கினார்.

➢ புனித ஜோசப்வாஸ் இறைபதம் அடைந்த *16.01.1711* இன் பின் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஜோசப்வாஸ் அடிகளாரைப் புனிதராக உயர்த்தவேண்டுமென்ற விண்ணப்பம் கொச்சின் ஆயர் டொம் பெட்ரோ பக்கேகோ அவர்களினால் முன்வைக்கப்பட்டது.

➢ அவர் வாழும்பொழுதே புனிதத்துவம் மிளிர்ந்தாலும், அவரைப் புனிதராக்கும் முயற்சிகள் மூன்று நூற்றாண்டுகளாகப் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

➢ வீரத்துவம் நிறைந்த விழுமியங்களின் செயற்பாட்டையும், ஒப்பிட முடியாத மறையறிவிப்பு ஆர்வத்தையும் தன்னகத்தே கொண்டிருந்த புனித ஜோசப்வாஸ் டச்சுக்காரரின் கலாபனையால் இலங்கையில் இல்லாமல் போகும் நிலையிலிருந்த கத்தோலிக்கத் திருச்சபையை மீளக் கட்டியெழுப்பினார். எமது மூதாதையரைக் காப்பாற்ற அவர் பல ஆபத்துக்களையும் தாண்டி இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்திருக்காவிட்டால் 150 ஆண்டுகள் நீடித்த டச்சுக் கலாபனையில் எமது விசுவாசம் தப்பிப் பிழைத்திருக்க முடியாது.

➢ அவரைப் புனிதராக உயர்த்தச் சகல கதவுகளையும் திறந்து அங்கீகாரமளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு நாம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளோம்.

➢ ஏற்கனவே பல மறைமாவட்டங்களில், பல பங்குத் தலங்களில், நிறுவனங்களில், குரு மடங்களில் புனித ஜோசப்வாஸ் பெயரால் ஆலயங்கள், சிற்றாலயங்கள், திருத்தலங்கள், நினைவுச் சின்னங்கள் திறக்கப்பட்டும், பெயர்கள் சூட்டப்பட்டும் காட்சியளிக்கின்றன.

➢ எனவே, ஜோசப்வாஸ் ஆண்டிலே எமது அன்பான அப்போஸ்தலரின் நினைவுகளோடு மட்டும் நின்றுவிடாது, அதற்கும் அப்பால் சென்று அவரைப் பற்றி அறிவதிலும், அறிமுகப்படுத்துவதிலும், அவர் தம் மாதிரிகையைப் பின்பற்றுவதிலும் முனைப்புடன் செயல்படுவோம்.

➢ திருத்தந்தை பிரான்சிஸ் புனிதர் பட்டம் அளிக்கும் திருப்பலியில் வழங்கிய மறையு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையில் "இலங்கை மக்களுக்கான கடவுளின் நன்மைத்தனத்தின், அன்பின் வல்லமையுள்ள அடையாளத்தைப் புனித ஜோசப்வாசில் நாம் காண்கிறோம். அத்துடன் நற்செய்தியின் பாதையில் நிலைத்திருக்கவும் நாமே உத்தமதனத்தில் வளரவும், அவர் தமது வாழ்வையே அர்ப்பணித்து ஒப்புரவு நற்செய்தி அறிவிப்புக்குச் சான்றாகவும், சவாலாகவும் விளங்குகிறார்.

எனவே, இந்நாட்டுக் கிறிஸ்தவர்கள் புனித ஜோசப்வாசின் முன்மாதிரிகையைப் பின்பற்றி, நம்பிக்கையில் உறுதியடைந்து அமைதிக்கும், நீதிக்கும், ஒப்புரவுக்குமான மிகுந்த பங்களிப்பைச் செய்யவேண்டுமென மன்றாடுகிறேன்" என்று கூறினார்.

- ஆகவே, புனித ஜோசப்வாசுக்கென அர்ப்பணிக்கப்பட்ட 2017ம் ஆண்டு செபத்தின் காலமாக, தியாகத்தின் காலமாக, அர்ப்பணிப்பின் காலமாக அமையட்டும்.
- கலாபனையால் துன்புறுத்தப்பட்ட, சிதறுண்டிருந்த மக்களிடையே அவர் பணியாற்றி ஒரு குரு கூட இன்றி இறந்துகொண்டிருந்த இலங்கைத் திருச்சபையை மீளக் கட்டியெழுப்புவதில் ஆற்றிய 29 ஆண்டு காலப் பணியின் இரகசியம் எதுவெனில் அவரது ஆழ்ந்த ஆன்மீகமும், ஆன்மாக்களுக்கான தாகமும் ஆகும். அத்துடன் அபாயமும், சவால்களும் நிறைந்த சூழலுக்கேற்ப அவர் மேற்கொண்ட மறையறிவிப்பின்போது அரச அதிகாரிகளிடமிருந்தும், திருச்சபை அதிகாரிகளிடமிருந்தும் எவ்வித உதவியுமின்றி இறை பராமரிப்பை மட்டுமே நம்பி வாழ்ந்தார்.

**மிக ஆழ்ந்த நம்பிக்கை:**

புனித ஜோசப்வாஸ் ஆழ்ந்த நம்பிக்கையுடையவராகத் திகழ்ந்தார். தொடர்ச்சியான சவால்கள், இடைஞ்சல்கள், நெருக்கடிகள், இன்னல்கள், பின்வாங்கல்கள், தோல்விகள் மத்தியிலும் இறைவனின் பராமரிப்பை நம்பினார். சிறு வயதிலிருந்து தனது பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்ட நம்பிக்கையின் வேர்களில் தனது வாழ்வை ஊன்றினார்.

**- நியமனங்கள் -**

- அருட்தந்தை. ஜூட் செட்ரிக் ஒக்கஸ் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் - கோரகல்லிமடு பங்குத்தந்தையாக 01.01.2017 முதல் ஆயரால் நியமனம் பெறுகிறார்.
- அருட்தந்தை. ஜெரிஸ்டன் வின்சன்ற் கல்லாறு உதவிப் பங்குத்தந்தையாக 01.01.2017 முதல் ஆயரால் நியமனம் பெறுகிறார்.
- அருட்தந்தை. A. நிக்கலஸ் ஜூட் புனித வளனார் சிறிய குருமட உதவி அதிபராக 01.01.2017 முதல் ஆயரால் நியமனம் பெறுகிறார்.

**மறையறிவிப்பு ஆன்மீகம்:**

கிறிஸ்துவின் வழி தன்னையே வெறுமையாக்கி நற்செய்தி அறிவிப்புப் பயணத்தை மேற்கொண்டார். உத்தமதனத்தோடு கூடிய செப வாழ்வு பலரைக் கவர்ந்தது. கடுமையான வரட்சியின்போது மழை வருவித்த புதுமையையும், கண்டியில் பரவிய வைசூரி நோய்த் தாக்கத்தின் போது துணிவுடன் மக்கள் மத்தியில் பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது எளிமையான சந்நியாச வாழ்வு அவரைச் "சம்மனசுச் சுவாமி" என மக்களால் அழைக்கப்பட வைத்தது.


**புனித ஜோசப்வாஸ் - நற்கருணையின் உண்மையான மனிதர்:**

ஆரம்பத் திருச்சபையே நற்கருணையை மையமாக வைத்து வளர்ந்தது (திப. 2:42). திருச்சபை நற்கருணையில் இருந்துதான் வாழ்வைப் பெறுகின்றது. புனித ஜோசப்வாஸ் இலங்கை மண்ணில் காலடி எடுத்துவைத்தபோது 30 ஆண்டுகளாகத் திருவிருந்து கொண்டாடப்படாத நிலை இருந்தது. அவர் முதன் முதல் ஒப்புக்கொடுத்த கிறிஸ்மஸ் திருப்பலியின்போதே 153 பேர் கைது செய்யப்பட்டனர். தனக்கு வேண்டிய ஊட்டத்தை நற்கருணையில் இருந்து பெற்றுக்கொண்டார். "திருச்சபை நற்கருணையை வாழ்கிறது. நற்கருணை திருச்சபையைக் கட்டியெழுப்புகிறது".

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமைதியான சுபாவம் கொண்ட அருமை ராசாவுக்கு, அரை குறைத் தூக்கத்திலும் அலாதி பிரியம்.

காலம், இடம், சந்தர்ப்பம் எதுவுமே பாராமல் தூங்கி வழிவதே அவர் குணாதிசயங்களில் முதன்மையானது.

எப்படித்தான் அது சாத்தியமாகிறது என்பது புரியாத புதிர்.

வழமைபோலவே மினி பஸ்ஸின் இடது புறமிருக்கும் தனியாசனத்தில் சயன போசனத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவரைப் பற்றி அறியாதவர்கள், சீமான் ஆசனத்தை இழந்துவிடக்கூடாதென்று பொய்த் தூக்கம் போடுவதாகவே நினைப்பர்.

சிறிது தாமதமாக ஏறிய நான் வலது புறமிருந்த நான்காவது இருக்கையை நோக்கி நகர்ந்தபோது, தம்மை எங்கே வெயில் தகித்துவிடுமோ என்ற அச்சத்தில், பவ்வியமாக கோணர் சீற்றை எனக்குப் பரோபகாரம் செய்வதான பாவனையில், முகமறியாத பயணியொருவர் ஒதுங்கி வழிவிட்டார்.

இருக்கையில் அமர்ந்ததும்தான் கவனித்தேன், அவரது மனையாளான எனது உறவினள் முன்கோணரில் இருப்பதனை. அட, மனைவியுடன் வந்தும் இப்படியா?

'அத்தான், அங்கை பாத்தியளா?'

"பார்த்தேன்" என்றமாதிரி புன்னகைத்துத் தலையசைத்தேன்.

"இந்தாள் எப்பவுமே இப்படித்தான்...." என்று சொல்ல வாயசைத்தவளைச் சைகையால் கையமர்த்தினேன்.

இறங்குமிடம் வந்ததும் அவள் புருஷனைத் தட்டி எழுப்பினாள், "தூங்கினது காணும். கெதியாய் இறங்கும்" சரியான வாயாடி, அவள்!

பிறிதொரு நாள் அவர்கள் இல்லத்திற்குப் போன விடத்தில், என்னைக் கண்டதும் புருஷன் முன்பாகவே அவள் ஒரு விஷயத்தைப் போட்டுடைத்தாள்.

"நேற்றிரவு நடந்த பகிடியைக் கேளுங்கோவன் அத்தான்.... இங்கை நாவலர் படத்தடியில் சைக்கிளை விட்டிட்டுப் போனவர், மூத்த விநாயகர் கோயில் வந்தபோது முழிச்சுப் பார்த்தவர் உடனை எழும்பியிருக்கலாம்தானே ... அது அடுத்த பஸ் கோல்ட்' என்று தெரிஞ்சிருந்தும், கொஞ்சத்தூரம்

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குத்தானேயென்று கண்ணை மூடியிருக்கிறார். பிறகு நெல்லியடி வந்ததும் தெரியாமல், மாலு சந்தியடிப் பிள்ளையார் கோயிலைக் கண்டதும் துடித்துப் பதைத்து அவசரமாக இறங்கியிருக்கிறார். எதிர்ப்பக்கமிருந்து எந்த வாகனமும் வராதென்று தெரிஞ்சு பொடிநடையாய் நடந்து வந்தாராம். அதைவிடப் பகிடி என்னென்றால் நாலு அன்னாசிப் பழங்கள் வாங்கி முன் சீற்றுக்குக் கீழை வச்சிட்டு மறந்துபோய் விட்டுட்டு வந்தாராம்.

அவள் அந்த விஷயத்தைச் சொல்லும்போதே கண்கள் குளமாகியிருந்தன. 'பகிடி' என்று சொன்னாலும், சொல்லும்போதே அவள் குரல் கம்மியது.

அந்த மனிதரோ சர்வ அலட்சியமாக,

"மறதி
யாருக்குத்தான்
வாறதில்லை ....
இதைப் பெரிசாய்
எடுத்துக்கொண்டு ...."
என்று பூசி மழுப்பி,
தன் தவறை
உணராமல்
அவளுக்குக்
கட்டளையிட்டார்.

"ராணி,
அத்தானுக்கு
தேத்தண்ணி ஒண்டு
போட்டுக்கொண்டு
வா!"

# தைத் திருமகளே வா! வா!

தைத்திரு மகளே வா! வா!
  கைக்கூப்பியுமை வரவேற்றோமே!
வைகறை வேளையிங்கே
  வைத்தோமே நிறைகுடமே!

இரண்டாயிரத்து பதினேழில் - எம்
  இடரறவே செய்திடுவாய்
இனிய பொங்கல் ருசி அதுவாய்
  எம் வாழ்வு அமைய வைப்பாய்!

களனி வயல் விளைந்ததுவே
  காளையரும் மகிழ்ந்தனரே!
குளம் நிறைந்த தாமரையாய்
  குமரியரும் சிரித்தனரே!

குவலயத்தில் கல்விச் செல்வம்
  கூடியே பெருகவென
தவமிருந்து பெற்ற இயேசு
  தவறாது காத்திடுவார்!

இலங்கை மாதா இந்நாளில்
  இதயமது மகிழ்ந்திடவே
வலம்புரி சங்கொலித்தே
  வரவேற்றோம் தை மகளே!

மாவிலை தோரணங்கள்
  மரகதமணி சரிகைகளும்
மாலையாக சூடினோமே
  தைத்திரு மகளே வா! வா!

வாழை மாங்கனிக னோடே
  மாதுளங் கனியும் சேர்த்தெடுத்தே
பாளைதரு இளநீர் கலந்தே
  பானக்கமாய் தருவோம் வாராய்!

திருத்தூதர் சுவிஷேஷமாம்
  மருத்து நீரால் நாம் குளித்து
குருக்களுரை கேட்டறிய
  தைத்திரு மகளே வா! வா!




## - நியமனங்கள் -

அருட்தந்தை. S. இக்னேஷியஸ் அடிகள் "சின்ன லூர்த்து அன்னை ஆலயம்"- நாவற்குடாப் பங்குத்தந்தையாக 18.12.2016 அன்று முதலும், அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா அடிகள் பெரிய புல்லுமலைப் பங்குத்தந்தையாக 20.12.2016 அன்று முதலும் ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

க.பொ.த. சா/தர் மாணவர்களுக்கானது

தரம் - 11 பாடங்கள் 17-22

பகுதி - I

• போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**25). தமது உடலை மதித்துத் தூய்மையாகப் பாது காக்க வேண்டும் என்பதைத் தம் வாழ்வில் வெளிப் படுத்திய புனிதைகள் இருவரின் பெயரைத் தருக?**
புனித அக்னஸ், புனித மரியகொறற்றி

**26). திருச்சபையானது எட்டாம் கற்பனையூடாகத் தமது பிள்ளைகளுக்குக் கற்பிப்பது என்ன?**
ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவராக வாழ வேண்டும் என்பது.

**27). வாழ்வின் கவலைகள், தொல்லைகள் மத்தியி லும் இறைவனை நோக்குபவர்களை மலைப் பொழிவு குறிப்பிடுவது எவ்வாறு?**
துயருறுவோர்

**28). கிறிஸ்தவப் பெற்றோரின் பொறுப்புகளில் ஒன்று என்ன?**
பிள்ளைகளைக் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்ப்பது.

**29). நீர் பொதுச் சொத்துக்களைச் சரியான முறை யில் பயன்படுத்தாது விடுவதனால் ஏற்படுவது என்ன?**
- எதிர்காலச் சந்ததியினர் பாதிப்படைவர்.
- நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.

**30). எபேசியர் 6:14-17ன் படி ஒரு கிறிஸ்தவன் தலைச் சீராவாக அணிய வேண்டியதும் மிதியடியாக போட்டுக்கொள்ள வேண்டியதும் எவை?**
- தலைச்சீராவாக - மீட்பையும்
- மிதியடியாக - அமைதியின் நற்செய்தியையும்

**31). மலைப்பொழிவின் மூலம் இயேசு கற்பிப்பது யாது?**
கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் பேறுமிக்க வாழ்வை உரிமையாக்கிக் கொள்ளும் வழி.

**32). தந்தையையும், தாயையும் மதிக்கிறவர்களுக்கு இறைவனால் கிடைக்கும் ஆசிர் ஆவது?**
நாடும், நீண்ட ஆயுளும்

**33). ஒருவர் பேறு பெற்றவர் என அறிவதற்குப் பல முறைகள் உள்ளன. அவற்றில் இரண்டை எழுதுக:**
- திருப்தியாயிருத்தல்
- இறைவனை வெளிப்படுத்துதல்
- இயேசுவுக்காக முழுமையாக அர்ப்பணித்தல்
- இறைவனில் ஒன்றித்திருத்தல்

**34). ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமுதா யத்தை உருவாக்குவதில் ஆட்சியாளர்களின் பொறுப்புக்கள் இரண்டைத் தருக :**
- தம்மிடம் சேவையைப் பெறும் பிரஜைகளுக்கு நீதியை நிறைவேற்றுதல், பரிவிரக்கம் காட்டுதல்
- தமது தலைமைத்துவத்தில் தமக்குள்ள கடமையை நேர்மையாக நிறைவேற்றுதல்.

**35). கத்தோலிக்கத் திருச்சபையில் மறைநூல் இல 2224ன் படி பிள்ளைகள் தமது கடமைகள் பொறுப் புகள் பற்றிய அறிவை முதன் முதலில் பெற்றுக் கொள்ளும் இடம் :**
வீடு

**36). எப்போதும் இறைவனில் சார்ந்திருத்தல், இறைவனை நம்பியிருத்தல் என்னும் பண்புகள் அடங்கிய இறையரசின் மதிப்பீடு எவை?**
ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்.

**37). உமது தேவைக்கு அதிகமாக உம்மிடம் செல்வம் இருப்பின் நீர் அதனை என்ன செய்வீர்?**
மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளல்.

**38). விண்ணரசுக்கு உரிமையுடையோர் யார்?**
நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர்.

**39). இறைவன் 10 கட்டளைகளை அளித்ததன் நோக்கம் யாது?**
மனிதனை அவனது மேன்மையான நிலையைப் பாதுகாக்கும் விதத்தில் வாழச் செய்வது.


- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதியதோர் இறை இரக்கத் திருத்தலம்



2016ம் வருடம் கார்த்திகைத் திங்கள் இருபதாம் நாள் மட்டுநகர் மறைமாநில வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தொரு நாளாகும். இப்பொன்னாளிலே முப்பெரும் விழாக்கள் ஒன்றாக ஒரே ஆலயத்தில் கொண்டாடப் பட்டன. அதுவும் ஒரே திருப்பலியில்.

சத்துருகொண்டானில் அமைக்கப்பட்ட இறை இரக்கத் திருத்தலம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும் என்ற செய்தியறிந்த மறை மாநிலப் பங்குகள் அனைத்திலுமிருந்தும் கொட்டும் மழையையும் பாராது பெருந்திரளான மக்கள் ஒன்று கூடினர்.

இந்த நன்னாளிலே இறை இரக்கத்தின் கொடையாக முப்பெரும் விழாக்கள் கொண்டாடப் பட்டன. முதலாவது, அன்று கிறிஸ்து அரசர் பெரு விழா, இரண்டாவது இறையிரக்க ஆண்டின் பூர்த்திவிழா, மூன்றாவதும் மிக முக்கியமானதுமான இறை இரக்கத் திருத்தலத்தின் நேர்ந்தளிப்பு விழா. இவற்றால் இந்த நாள் மாபெரும் பாக்கியம் செய்தது என்றே கூறவேண்டும்.

ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி. யோசப் பொன்னையா ஆண்டகையின் வருகையுடன் மாலைகள் அணிவிக்கப்பட்டு பால் பொங்கி, நாடாவை வெட்டி வைபவ ரீதியாக உள்ளே நுழைந் தனர். ஆயருடன் குரு முதல்வர், மறைக்கோட்ட முதல்வர்கள், குருப்பிரசாதிகள், துறவறத்தார் உள்ளே சென்றதும், ஆயர் பீடத்தை அணுகி நீரை ஆசிர்வதித்தார். அந்த ஆசிர் நீரால் குருக்கள் ஆலயத்தையும், மக்களையும் ஆசிவதித்தனர்.

அடுத்த கட்டமாகப் பீடத்தை ஆயர் அபிஷேகம் செய்தார். திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. ஆராதனை ஆரம்ப மானது. புனித பவுஸ்தினா பற்றியும் இறைஇரக்கப் பக்தி பற்றியும் கூறும் முன்னுரை இடம்பெற்றது. இறை இரக்கச் செபமாலையும் பிரார்த்தனையும் இவற்றைத் தொடர்ந்து ஆசீர்வாதம் முடிந்ததும் முதற் திருப்பலி ஆரம்பமானது. திருத்தலத்தின் முதற் திருப்பலி கிறிஸ்து அரசர் பெருவிழாத் திருப் பலியாகவும், இறை இரக்க ஆண்டுப் பூர்த்தித் திருப் பலியாகவும் கோலாகலமாக நிறைவேற்றப்பட்டது. மழைபொழிந்து இயற்கை ஆசீரளித்தது. என்றாலும் மட்டக்களப்பு மறைமாநிலப் பங்குகளிலிருந்து வருகை தந்த விசுவாசிகளின் பங்களிப்பைக் காண முடிந்தது.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து,
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
தொல்லை இல்லா மனநிலை காட்டி
கல்லையும் கனியாக்கு அன்புநிலை காட்டி

கருத்தினில் களங்க மற்றநிலை காட்டி
இருள்அகல கதிர்ஒளி வெளிச்சம் காட்டி
இருத்தி முத்தி இனிதுபெறக் காட்டி
திருத்திய இனிய வழியை காட்டி

மெய்ஞான வழியினை வளம்பெறக் காட்டி
வாய்ப்பெலாம் நல்வழி வரக் காட்டி
காய்க்கா மரமும் காய்க்கக் காட்டி
பொய் எல்லாம் அழியக் காட்டி

சத்தத்தி னுள்ளே இறைவனைக் காட்டி
சித்தத்தி னுள்ளே திருத்துவம் காட்டி
முத்தி பெறவே சக்தியைக் காட்டி
நித்தம் என்னிலே அருள்ஒளி காட்டி

நிஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்து
எஞ்ஞான்றும் தெளிவுடன் வியாபிக்க வருவாய்
புத்தாண்டே! புனிதமாய் பூத்துவருக .... வருக ... வருக....

## புத்தாண்டே! புனிதமாய் வா!

வித்தகர். வயலற் சரோஜா -



திருப்பலி வேளையில் குறிப்பாகக் கூறக்கூடிய ஒரு விடயம், திருக்கோவிலிலிருந்து வந்த 3 சிறுமியர் "நானே உன் கடவுள்" எனும் தியானப் பாடலுக்கான அபிநயம் செய்தமை பக்தர்களை மெய் சிலிர்க்க வைத்ததென்றால் அது மிகையாகாது. அவர்களை நிச்சயம் பாராட்டியே ஆகவேண்டும். தொடர்ந்தும் பக்தியுடன் திருப்பலி நிறைவேற்றப்பட்டு யாவும் மகிழ்வாகச் சுவையான மதிய உணவுடன் முற்றுப் பெற்றன.

### - நியமனங்கள் -

- அருட்தந்தை. ஜோசப் நிகஸ்டன் பீற்றர்ஸ் புனித மரியாள் பேராலய உதவிப் பங்குத் தந்தையாக 01.01.2017 முதல் ஆயரால் நியமனம் பெறுகிறார்.
- அருட்தந்தை. அன்ரனி டிலிமா திரு இருதய ஆண்டவர் ஆலயம் - கல்முனைப் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாக 01.01.2017 முதல் ஆயரால் நியமனம் பெறுகிறார்.
- அருட்தந்தை. இருதயநாதன் ஜெமில்டன் வாகரை உதவிப் பங்குத்தந்தையாக 01.01.2017 முதல் ஆயரால் நியமனம் பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பலர் வாழ்வில் அருள்மழையாகப் பொழிவதுண்டு; பேரிடியாக விழுவது முண்டு! கடந்த சில வாரங்கள் இதை நமக்கு எடுத்துக்காட்டு பவையாக அமைந்துவிட்டன. குறிப்பாகத் தமிழக முதலமைச்சரின் மறைவு தமிழக ஏழை எளிய மக்களை மட்டுமல்ல, படித்தவர்களை, இளைஞர் களை, பெரியவர்களையும், உலகத் தமிழ் மக்கள் அனைவருக்கும் பேரிடியாக அமைந்து விட்டதை எவரும் ஏற்றுக் கொள்ளவே செய்வர். அத்தனை அன்பு நெஞ்சங்களையும் ஏமாற்றத்தில் ஆழ்த்தி, எல்லோரது பிரார்த்தனைகளையும் புறந்தள்ளி இறைவன் அவரை அழைத் துக்கொண்டார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் தன் சுயநலமற்ற ஆட்சி முறையால் தமிழகம் மற்றும் உலகத் தமிழர் வாழ்வில் நன்மை செய்ய இவரை விட்டால் யாருமில்லை என்று எண்ணியிருந்தவேளையில் ஏமாற்றம் தான் எஞ்சி யுள்ளது. பலருக்கு இவரது மறைவு நெஞ்சில் பால் வார்த்திருக்கிறது. தமது சொந்த வேலைத் திட்டங் களை முன்னெடுத்த நம் நாட்டவருக்கு சிம்ம சொப்ப னமாக இருந்த ஒரு இரும்புப் பெண் மரணித்தது ஆறுதலேதான்.

அதுமட்டுமல்ல, அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்பின் அதிர்ச்சி வெற்றி இங்கே இக்கட்டில் தவித்து நின்ற ஆட்சிக்கும், பேரினவாதிகளுக்கும் பெரும் வரப்பிரசாதமாகிவிட்டது. நாம் முன்னர் பலமுறை சொல்லியிருப்பதுபோல காலந் தாழ்த்தும் போக்கு மிகுந்த பலன் தந்திருக்கிறது. பொறுப்புக் கூறல் விவகாரத்தால் மூச்சுத்திணறிக்கொண்டிருந்தவர்கள் டொனால்ட் ட்ரம்பிடம் சொல்லி அந்த பேராபத்திலி ருந்து தம்மை, தம் நாட்டைக் காக்க மண்டியிட முன் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இது ஒரு அருள் மழைதான்!

நம் பேரினவாத சிந்தனையாளர்களுக்கு அரசியல் மாற்றம் சம்பந்தமாகக் காட்டப்படும் மிக மந்தமான முன்னெடுப்புக்கள் கூட 'அவசரமாகப்' படுகிறது. தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள பௌத்த வாழிடமாகச் சிலை வைத்தும், விகாரைகள் அமைத் தும், அமைத்த விகாரைகளைப் பேணிக் காக்கப் பேரின குடியேற்றங்களை உருவாக்கியும் மண் அபகரிப்புச் செய்யும் பணி பிக்குகளின் தீவிர செயற்பாடுகளினால் விரைவு வேகத்தில் முன் னெடுக்கப்படுவது தமிழ்ப் பிரதேசங்களின் அமைதி யைச் சீர்குலைத்து வருவ தைக் கண்டும் காணாததுபோல செயற்படும் அரசுமேல் சந்தேகங்களைக் கிளப்புகிறது. இதனால்தான் தமிழர் தீர்வு இவ்வளவு மந்தமாக முன்னெடுக்கப்படுகின்றது. சமய ஒற்றுமையைக் குலைக்கும் வண்ணம் பேசிய முஸ்லிம் மதகுருவை சூட்டோடு சூடாகக் கைதுபண்ணி நீதிமன்றில் நிறுத்த முடியுமானால் இவ்வளவு தூரம் ஆர்ப்பாட்டம் காட்டும், மத, இன அமைதியைக் குழப்புகின்ற, தமிழ் அரச அதிகாரி களை அச்சுறுத்தி வருகின்ற ஒரு பௌத்த மதத் துறவியை ஏன் இதுவரை கைதுபண்ண முடிய வில்லை?




– பாமுர்வேந்தன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா முதல்வரம்மாவே..!

கலைக்கோட்டன் அ. இருதயராஜா –

ஜெயம் என்ற சொல்லுக்கே
இலக்கணமாய் வாழ்ந்தீரம்மா!
ஜெயலலிதா முதல்வரம்மாவே!
செகம் உமை மறந்திடுமோ!

தொண்டைக்குழி ஈரம்வற்ற
துடித்தழும் தமிழகத்தின்
துயரத்திலே தொண்டன் குடும்பமும்
தொடராக சேர்ந்திட்டோமே!

ஈழத்தமிழ் உறவுகளை
தத்தெடுத்த தாயவளே!
மாளத்தான் வைத்தனனோ
மகாபாவி காலனவன்.

தமிழ்நாடு தலை சிறக்க
புகழோடு பணிபுரிந்தீர்
மழையெனவே கண்ணீரை
ஈழமது பொழியுதம்மா!

எம் ஜி ஆர் சிவாஜி என்னும்
இமயம் தொட்ட நடிகரோடே
எம்மாத்திரம் நடிப்பைத் தந்தீர்
எம் இதயம் மறந்திடுமோ!

சினிமா உலகமதில்
சிரசில் முடி தரித்தவளே!
கனிவான காட்சிகளை
பதித்தாயே எம் மனதில்

உதிக்கின்ற உதய சூரியனும்
உமைத்தேடி அழுகின்றான் – உம்மை
விதைத்திட்ட மெரினா கடற்கரை
அலைகளும் அழுகின்றனவே!

மாளிகையே அவள் வீடு
மரக்கிளையில் அவள் கூடு என்றீரே
மெரீனா கடற்கரையை
மாளிகை ஆக்கியதேனோ!

தமிழக வரலாற்றிலே
தனி இடம் பிடித்த தாயே
பொழுதுகள் தோறும் தாயே
புதுமைப் பெண்ணாய் வாழ்வீரம்மா!



இன மத நல்லிணக்கம் பேச்சளவில் நின்றுவிடும் ஒன்றுதானா? இல்லையேல் அது செயற்படும் ஒரு வேலைத் திட்டந்தானா? தமிழர் தரப்புக்கு அல்லது தமிழ்ப் பேசும் சமுதாயத்திற்கு நன்மையான எதையும் அனுமதிக்கப்போவதில்லை என்ற எதிரணிப் பேரினவாதிகளின் செயற்பாடுகள் அரச தரப்பிலும் எதிரொலிக்கின்றபோது. சமஷ்டியில்லை; அதிகாரப் பரவலாக்கலில்லை, பொறுப்புக் கூறலில்லை என்று வரும் தீர்வை நாம் 'ஏமாற்றிப் போட்டாங்களடா' என்று ஏற்கத் தான் போகிறோமா? அல்லாது போனால் ... ? நமக்கு யார்தான் உதவ இருக்கிறார்கள்? மீண்டும் தனிப் போராட்டந்தானா?

மன்னார் பகுதியில் ஆதித் தமிழர் நாகரீகத்தோடு முன்னெடுத்த வாழ்வு பற்றிய ஆய்வுகள் குறித்த தமிழர் தரப்பில் அரசியல் ரீதியாகக் கவனம் பெறவில்லை. பரணவிதானக்கள் அந்தக் குடிமக்களின் நாகரீக வாழ்வுக்கு மஹாவம்சத்தினடிப்படையில் புது அர்த்தங்களை உருவாக்கு முன்னம் அக்கறையுள்ள தமிழர்கள் - புலம் பெயர் தமிழர்கள் – தென்னிந்திய தமிழர்களின் உதவியோடு புதை பொருளாராய்ச்சிகள் முன்னெடுக்கப் பட்டுத் தமிழன் வரலாறு ஆவணமாக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயம்! இது விடயத்தில் தமிழ்ப் பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்கள் தமிழகப் பல்கலைக்கழகங்களோடு இணைந்தாவது செயற்திட்டங்களை முன்னெடுப்பது இந்நாட்டின் பூர்விக மக்களின் வரலாறு உலகெங்கும் அறியத் தரப்படவேண்டும். இத்தகைய ஆராய்ச்சிகள் பட்டப்படிப்புக்களுடன் மட்டுப்படுத்தப்படக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்


## கல்லீரல் பாதிப்பை அறிந்திடும் வழிகள் .....

கல்லீரலின் ஆரோக்கியத்தைக் காப்பது மிகவும் முக்கியம். ஆனால், கல்லீரல் நலம் பாதிக்கப் பட்டிருந்தால் அதை எப்படி அறிந்து கொள்வது என்பதைப் பார்க்கலாம்.

நம் உடல் உள்ளுறுப்புகளில் மிகவும் முக்கியமான ஒன்று கல்லீரல். உடலின் சீரான இயக்கத்துக்குப் பல வகைகளிலும் துணைபுரியும் முதன்மையான உறுப்புகளில் ஒன்றாகக் கல்லீரல் உள்ளது. எனவே, கல்லீரலின் ஆரோக்கியத்தைக் காப்பது மிகவும் அவசியமானதாகும். ஆனால், கல்லீரல் நலம் பாதிபாதிப்படைந்துள்ளது என்பதனைக் கண்டறிவது எவ்வாறு? கீழ்வரும் அறிகுறிகள் மூலம் கல்லீரல் பிரச்சினையை அறிந்துகொள்ளலாம்.

- வயிறு செரிமானம் தொடர்பாக நீடித்த பிரச்சினை இருந்து வந்தால் அது கல்லீரல் சேதத்துக்கான அறிகுறிதான். மிக இளவயதில் கர்ப்பம் தரிப்பது, மனச் சோர்வு போன்ற காரணங்களால் கூடக் கல்லீரல் பாதிப்படைய அதிக வாய்ப்பு இருக்கிறது.
- உடலும், மனமும் எப்போதும் ஒருவிதக் களைப்பு மற்றும் மந்தமான நிலையில் இருந்து வந்தால் உடனே வைத்தியரை அணுகுவது நலம். ஏனென்றால், அதுகூடக் கல்லீரல் பாதிப்புக்கான அறிகுறிதான்.
- பசி எடுக்காமலும், உடல் எடை திடீரென அதிக அளவில் குறைந்தாலும், கல்லீரலில் பிரச்சினை ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் இருக்கின்றன.
- சிறுநீர் மஞ்சள் நிறமாக வெளியேறினால் அது கல்லீரல் பிரச்சினையைச் சுட்டிக் காட்டுவதாக அமையும்.
- மலம் கழிக்கும்போது அதன் நிறம் பழுப்பிலிருந்து நல்ல மஞ்சளாகவோ, சாம்பலாகவோ மாறியிருந்தால் கல்லீரலில் சேதம் இருப்பதாக அர்த்தமாகும்.
- கடுமையான மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அதன் மூலம் கணையம், பித்தப்பை ஆகியவை பாதிப்படைந்தால் அது கல்லீரலையும் பாதிக்கும் வாய்ப்பு இருக்கிறது.
- கீழ் வயிற்றில் தொடர்ந்து வலி இருந்து வந்தால் கல்லீரலில் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

மேற்கண்ட அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக வைத்தியரை அணுகி உரிய சிகிச்சை பெற்றுக் கொள்வது நலம்.



### வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்...

'தொண்டன்' சஞ்சிகையைப் பெற்று எமது வெளியீட்டுக்கு உதவிவரும் அனைவருக்கும் எமது நன்றி.
எமது சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், தரமான ஆக்கங்களையும் எமக்கு எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅவைச் செய்திகள்



திருத்தந்தை பிரான்சிஸ் சுவீடன் நாட்டு அரசி சில்வியாவையும் அவரது 14 மாதங்கள் நிறைந்த பேத்தியையும் சந்தித்தவேளையில் ....

- 1917ம் ஆண்டு மே 13 முதல் அக்டோபர் 13ம் திகதி வரை, லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ்கோ என்ற மூன்று இளையோருக்கு, அன்னை மரியா ஆறுமுறை காட்சிகள் கொடுத்த நிகழ்வின் 100ம் ஆண்டு நிறைவைப் பாத்திமா திருத்தலம் 2017ல் கொண்டாடுகிறது.

- 2018ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் உலக ஆயர்களின் 15வது மாமன்றம் வத்திக்கானில் நடைபெறும் என்றும், இந்த மாமன்றத்தில் இளையோரை மையப்படுத்திக் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார். 'இளையோர், நம்பிக்கையும், அழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்' என்பது ஆயர் மாமன்றத்தின் மையக் கருத்தாக அமையும்.

- துன்பமான, கடினமான சூழல்களில் வாழும் மனிதர்களைத் தேடிச் சென்று, அவர்களுக்கு ஆறுதல் வழங்குவதில், இயேசுவின் எடுத்துக்காட்டைத் திருத்தந்தை பின்பற்றுவது, அங்கிலிக்கன் சபையைச் சார்ந்தோரிடம் ஆழமான தாக்கங்களை உருவாக்கியுள்ளது என்று கான்டர்பரி பேராயரும், அங்கிலிக்கன் சபையின் உலகத் தலைவருமான ஜஸ்டின் வெல்பி கூறினார்.

- வறுமை குறைந்துள்ளது. மக்களின் நலவாழ்வு முன்னேறியுள்ளது. கல்வியும், தொடர்பு வசதிகளும் பெருகியுள்ளன என்று 2016ம் ஆண்டுக்குரிய ஐ.நா.வின் அறிக்கை கூறினாலும், இந்த முன்னேற்றங்கள் சமமான நிலையில் அனைவரையும் அடையவில்லை என்பதும் உண்மை என்று வத்திக்கான் உயர் அதிகாரி பேராயர் பெர்னதித்தோ அவுசா கூறியுள்ளார்.

- மருத்துவ உலகில் தொழில்நுட்பம், நோய் தீர்க்கும் முறை, நோய்த் தடுப்பு முறை ஆகியவற்றில் பெருமளவு முன்னேற்றங்கள் இடம்பெற்றாலும், அவற்றின் பயன்கள் ஆபிரிக்காவில் வாழும் பெரும்பான்மையான மக்களைச் சென்றடைவதில்லை என்று வத்திக்கானின் நீதி, அமைதி அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் டக்சன் கூறினார்.

## வீட்டுக் குறிப்புகள்

- **கோடை காலத்தில் மதிய உணவில் வெஜிடபிள் சாலட் அவசியம் சேர்க்க வேண்டும். அதிக எண்ணெயில் பொரித்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.**

- **எவர்சில்வர் பாத்திரங்கள் நாளடைவில் பளபளப்பு மங்கினால் வாரத்துக்கு ஒரு முறை விபூதியைக் கொண்டு நன்கு தேய்த்து வாருங்கள். வெள்ளிப் பாத்திரங்கள் போல் மின்னுவதைப் பார்க்கலாம்.**

- **பிரஷர் குக்கரை உபயோகப்படுத்தாத நேரங்களில் மூடி வைக்கக்கூடாது.**

- **ஒரு டம்ளர் தண்ணீரில் நான்கு ஸ்பூன் டேபிள் சால்ட் கலந்து அதை அறையின் நான்கு பக்க ஓரங்களில் தெளித்துவிட்டால் எறும்பு நடமாட்டம் இருக்காது.**

- **வீட்டில் குளிர்சாதனப் பெட்டி இல்லாதவர்கள் காய்கறிகளின் மீது ஈரத் துணியைப் போட்டு மூடி வையுங்கள். வாடாமல் இருக்கும்.**

- **பொருட்களைக் கரையான் அரிக்காமல் இருக்க கற்பூரத்தைப் பொடி செய்து தூவி வையுங்கள்.**

- **வெள்ளிச் சாமான்களை பீரோவில் வைக்கும்போது அதற்குள் கற்பூரத்தைப் போட்டு வைப்பது நல்லது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு புள்ளியில் சந்திக்கும்போது

- சிறுகதை -

கடந்த ஏழு நாட்களாகக் காய்ச்சல் அவனை வாட்டி வதைத்தது. வாடி வதங்கிய கொடிபோலச் சுருண்டுகிடந்தான். இலேசான முனகல் கேட்கிறது. தாய் தன்னால் முடியுமான எல்லாம் செய்துபார்த்துவிட்டாள். நேற்றிரவு இரும்புத்துண்டொன்றை எடுத்து அவன் தலையை மூன்றுமுறை சுற்றி,

“தாய் கண்ணூறு, தகப்பன் கண்ணூறு, பேய்க் கண்ணூறு, பெருநாட்டார் கண்ணூறு, எல்லார் கண்ணூறும் விட்டு விட்டுப் போகவே....” என்று சொல்லி அவனை அதில் துப்பச் சொன்னாள். சோர்ந்துகிடந்த அவன் அலுப்போடு துப்பினான். ஒருசில உமிழ்நீர்த் துளிகளே பறந்தன. அந்தளவிற்குத் தொண்டை வறண்டு கிடந்தது. இரும்பைக் கால்வரை வருடி தரையில் தட்டி எரிந்த அடுப்பினுள் நுழைத்துக் காய்ந்த பொச்சிமட்டைகளைக் கவிழ்த்து வைத்தாள். குசினிக்குள் சென்று அரிக்கன் சட்டியில் தண்ணீர் எடுத்து வந்து நன்றாகப் பழுத்த இரும்பைப் பட்டென்று அதனுள் போட்டுச் சூடாக எழுந்த ஆவியை மகனின் முகத்தில் பிடித்தாள்.

“சரியான கண்ணூறுதான் இரிக்கி, என்னமா ஆவி வருது” என்றும் கூறினாள். ஆனால், இன்றும் கூடக் காய்ச்சல் விட்டபாடில்லை. மகனைப் பார்த்தபடியே மனதில் கவலையுடன் அவர் சாய்ந்திருந்தார். குடும்பச் சுமைகள், உத்தியோகச் சுமைகள், சமூகத்தில் தான் சார்ந்த தளத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள எடுக்கும் முயற்சிகளில் எழும் சறுக்கல்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் எல்லாம் அவரைச் சற்று அதிகமாகவே முதுமையை நோக்கித் தள்ளியிருந்தன.

“மகன், கல்லறை ஆண்டவரிட்ட போய்வருவம் வெளிக்கிடு மகன்....” என்றார்.

தலையை அசைத்தபடியே மெல்ல எழுந்து முகத்தைக் கழுவிச் சேர்ட்டை அணிந்து கொள்கிறான்.

“அப்பா, நானும் .....” சிணுங்கினாள் சின்ன மகள். அவளை ஒருவாறாகச் சமாதானப்படுத்தி விட்டுப் புறப்பட்டனர். ஆறு மைல்களைக் கடந்தது மோட்டபைக். இருகரம் விரித்தவராகக் கருணை மழை பொழியும் கர்த்தரின் முன்பாக மண்டியிட்டனர். வாய்விட்டே செபித்தனர்.

“என் தெய்வம் என்னைக் கைவிட மாட்டார்” என உரத்துப் பாடினர். காய்ச்சலால் மகன் படும் துன்பத்தை அவரால் தாங்க முடியவில்லை. பிடிவாதமான ஒரு வாதாட்டத்தை அவர் உள்ளத்தில் நடத்திக்கொண்டிருந்தார்.

“ஏசப்பா, நான் உங்கட மகன். இந்தச் சன்னிதானத்தில்



- பைந்தமிழ்க் குமரன் டேவிட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்காக வருசக் கணக்கில பணி செய்தவன். இப்ப வந்திருக்கிறன். காணி, பூமி, பட்டம், பதவி, சொத்து, சுகம் எதுவும் கேட்டு நான் வரல்ல. என்ர மகன் ஏழெட்டு நாளாக் காய்ச்சலில துன்பப் படுறான். விடுதலை தாங்க ஏசப்பா. உம்மால முடியம் ஏசப்பா. உம்மால மட்டுந்தான் முடியும் ஏசப்பா.... கைவிட்டுராதீங்கப்பா ....." உள்ளத்தால் அழுதார். மனதில் ஒரு வைராக்கியம். "கல்லறையப்பா கைவிடமாட்டார்." மெழுகுதிரிகளைக் கொழுத்தினார். சிலுவையைத் தொட்டு வணங்கினார். மோட்டபைக் திரும்பியது.

நேரம் மாலை ஆறு முப்பது. கிருஸ்ணன் டொக்டர் வீட்டில் ஏகப்பட்ட சனமாக இருக்கும். எதுக்கும் கொண்டுபோய்க் காட்டத்தான் வேணும். மகனைக் கூட்டிக்கொண்டு போனார். முன் மண்டபத்தில் இருபுறமும் இருந்த கதிரைகளில் நோயாளர்கள் நிறைந்து கிடந்தனர். சுதந்திரம் மறுக்கப்பட்ட அடிமைகளாய் மீன் தொட்டிக்குள் சுற்றித் திரியும் மீன்களைக் காட்டி அழும் குழந்தைகளைத் தேற்றியபடிச் சில தாய்மார் நிற்கின்றனர். இருமலும், முனகலுமாய் சில பழசுகள். மகனையும் ஒரு கதிரையில் இருத்திய வர் கவலையுடன் நடந்தார். கிருஸ்ணன் டொக்டர் தன்னுடன் உயர்தர உயிரியல் பிரிவில் படித்தவர் என்பதை அவர் பெருமையாக நினைத்தாலும் அவரிடம் ஒரு தடவைதானும் காட்டிக்கொண்ட தில்லை. கைராசிக்காரர். நேரம் ஊர்ந்துகொண்டி ருந்தது. இரவு எட்டு மணியைப் பொறுமை தாண்டியபோதுதான் அவரது அறைவாசலை அடைய முடிந்தது. ஏழுநாள் காய்ச்சல். இடையில் குருதிப் பரிசோதனை செய்தது.

உடற்சோர்வு, வாந்திபேறு. காய்ச்சல் எட்டாவது நாளாயிற்று. இரத்தப் பரிசோதனை அறிக்கையில் ஓரிடத்தில் "லோ" என்ற சொல் எழுதப்பட்டிருந்தது. அவருடைய மனம் பதைக்கத் தொடங்கிவிட்டிருந்தது. எல்லாவற்றை யும் கூர்ந்து கேட்டபடியே இமைகளை உயர்த்தி யும், முதுகில் தட்டியும், வலது கையின் மேலாக இடது கையை வைத்து அழுத்தியும், இதயத் துடிப்பு எல்லாவற்றையும் பரிசோதித்தவர்,

# உலகெங்கும் மரியாளின் புகழ்...

## அற்புதங்களின் மாதா: 21

உரோம், இத்தாலி



கத்தோலிக்க மதத்திற்கு எதிரான எண்ணம் கொண்ட மேரி அல்போன்ஸ் ரட்டிஸ்போன் என்ற ஒரு யூதர், உரோம் நகருக்குப் பயணங்கள் மேற்கொண்டபோது ஒரு பிரபுவின் நண்பரானார். அதன்பிறகு, அன்னையின் அதிசயப் பதக்கத்தை ஒரு எளிய சவால் என்ற வகையில் அணியத் தொடங்கினார். சென்ட் ஆன்ட்ரியா டெல் பிராட் என்ற இடத்திலுள்ள ஆலயத்தில் தனது நண்பரான பிரபுவைச் சந்திக்க 1842ம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதியன்று காத்திருந்தபோது, அன்னை கன்னிமரியாளின் தரிசனக் காட்சியை அவர் எதிர்கொண்டார். அந்நிகழ்விற்குப் பிறகு, கத்தோலிக்கராக மாறிய அவர், பின்னாளில் ஒரு குருவாகவும் ஆனார். யூதர்களைக் கிறிஸ்தவர்களாக மனம் மாறச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு துறவறச் சபையையும் அவர் நிறுவினார். அன்னையின் காட்சி கிடைத்த நிகழ்விற்கு அடுத்த மாதத்தில் இது தொடர்பான அதிகாரபூர்வ விசாரணையை வத்திக்கான் மேற்கொண்டது. பலரது சாட்சியங்களுக்குப் பிறகு, அவரது திடீர் மனமாற்றம் முற்றிலும் அதிசயமானது என்றும், அன்னையின் சக்திவாய்ந்த பரிந்துரை காரணமாக நடைபெற்ற கடவுளின் ஒரு செயற்பாடே இது என்றும் வத்திக்கான் உறுதிப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே கொடுத்த மாத்திரைகளை நிறுத்திவிட்டு புதிய மாத்திரைகளை எழுதி அவற்றை வாங்கிக் கொடுக்கும்படியும் நாளை காய்ச்சல் குறையாவிட்டால் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும் என்றும் கூறி, இரண்டு காகிதத் துண்டுகளை எழுதிக் கொடுத்தார்.

இரவு பத்து மணி கடந்திருந்தது. மகனை வீட்டில் விட்ட கையோடு பாமஸியைத் தேடி ஓடினார். புதிய மாத்திரைகள் மிக விலை கூடியவை. கையில் இருந்த காசு போதவில்லை. ஒவ்வொன்றிலும் ஐந்தைந்து மட்டுமாக வாங்கிக்கொண்டு மழைத்தூறலில் நனைந்தபடியே வீடு வந்தார். வேண்டாமென்று அழுது மன்றாடிய மகனுக்கு இரண்டு இடியப்பங்களை ஊட்டி, மூன்று புதிய மாத்திரைகளையும் கொடுத்தார். ஏசப்பா என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன. அன்று இரவு நித்திரையுமில்லை, நிம்மதியுமில்லை. கட்டில் மெத்தைச் சூடு வேண்டாம் என்று பாயிலே உறங்கியது குடும்பம். அடிக்கடி புறங்கையை மகனின் கழுத்தில் வைத்துப் பார்த்துக்கொண்டார். நள்ளிரவு தாண்டும்போது உடல்நிலை சாதாரணமாயிற்று. காலையில் எழுந்த மகன்,

“காய்ச்சல், இருமல் இல்லப்பா. இலேசான சோர்வாக இருக்கிறது” என்றான்.

“ஆண்டவரே நன்றி... நன்றி ... ஆண்டவரே! ஏசப்பா நீங்க என்னக் கைவிடல்ல ஏசப்பா.....” அடி மனதில் எழுந்த எண்ணங்கள் வார்த்தைகளாக வெளிப்பட்டன.

“அந்த மனிசன் கை வெச்சாரன்டா வருத்தம் பறந்து போகும். கைராசிக்கார மனிசன். இரவு அவர் எழுதித் தந்த குளிசைகளாலதான் தம்பி எழும்பியிரிக்கான்” என்றபடியே நடந்துவந்தாள் அவர் மனைவி.

தலையை நிமிர்த்தினார். நல்லாயன் இயேசுவின் படத்தில் பார்வை பதிந்தது. “இறைவல்லமையும், அறிவியலும் ஒரு புள்ளியில் சந்தித்தன. அந்தப் புள்ளியில் என் மகன் சுகமடைந்தான்” என்று சொன்னார். அவள் விழித்தாள். மீண்டும் சொன்னார். “அறிவியலின் அத்திவாரமும் இறைமாட்சிதான். வல்லமையும், அறிவியலும் சந்தித்த புள்ளியில் நம் மகன் சுகம் பெற்றான்” என்றார்.

அன்ரனின் வீட்டில் விருந்தாளிகள் வந்திருந்தார்கள். ‘பொங்கல்’ இம்முறை அன்ரனின் வீட்டில்தான். அன்ரனுடன் படித்த ‘சிவா’ லண்டனில் இருந்து குடும்பத்தாருடன் விடுமுறைக்காக இலங்கை வந்து அன்ரன் வீட்டில் தங்கியிருந்தார்.

சிவா சோதிடம் போன்றவற்றில் அதீத நம்பிக்கை கொண்டவர். “அன்ரன்! நாளைக்கி விடிய நாலு மணிக்கு ரூபன் சாஸ்திரியாரிட்ட போகனும். ஓட்டோக்காரன வரச்சொல்லி விடுங்க” என்று முதல் நாளே அன்ரனுக்கு ஞாபகமூட்டினார் சிவா.

மறுநாள் காலை 4.00 மணிக்கு ஓட்டோவில் சிவா வெளிக்கிட்டுச் சென்றவர், போனபோக்கிலேயே திரும்பி வந்துவிட்டார்.

“என்ன சிவா ..... போனபோக்கிலேயே திரும்பி வந்திட்டீங்க.....”

“இரவு ரூபன் சாஸ்திரி செத்திட்டாராம்....”

அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்த அன்ரனின் சின்ன மகன் கேட்டான்:

“அப்போய், எல்லோருக்கும் எதிர்காலம் பற்றிச் சொல்றவர்க்கு ... தன்ர எதிர்காலம் பற்றித் தெரியாமல் போச்சே ...... சனத்திற்கு இவ்வளவு காலமும் என்னத்தத்தான் சொன்னவரோ தெரியாது .....”

அன்ரனும், சிவாவும் ஆளையாள் பார்த்துக்கொண்டார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்கத் திருமறை மாணவர் பக்கம்

## க.பொ.த. (உயர்தரம்)

நிம்மினி கஜேந்திரன்

### தூய பவுலின் முக்கிய படிப்பினைகள் :

புற இனத்தாரின் அப்போஸ்தலராக விளங்கிய தூய பவுல் மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகள் எங்கும் சென்று நற்செய்தியினைப் போதித்துப் பல்லாயிரக்கணக்கானோரை மனந்திரும்பப் பண்ணினார். கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டவர்களுக்குத் திருமுழுக்கு கொடுத்துப் பலரைக் கிறிஸ்தவராக்கினார். பின்னர், அவர்களிடையே சபைகளை ஸ்தாபித்து, அவர்களை இடையிடையே சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளையும் தீர்த்து, காலத்தின் தேவைக்கேற்பப் பல கடிதங்களையும் எழுதினார். இவை திருமுகங்கள் என்றழைக்கப்பட்டன. இவர் முதல் புற இனத்தவர் மட்டுமல்ல, முதல் கிறிஸ்தவ இறையியலாளரும் ஆவார். யூத மதத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராக விளங்கிய இவர் சட்டங்களையும், பாரம்பரியங்களையும், இறையியலையும் நன்கு கற்றுத் தேர்ந்தவராவார். இந்தவகையில் உருவானதே இவரின் மடலில் வெளிப்படும் இறையியல் கருத்துக்களாகும்.

புதிய ஏற்பாட்டில் தூய பவுல் ஒரு போதகராக மட்டுமல்ல ஓர் சிறந்த எழுத்தாளராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளார். அக்காலத்துக் கடிதம் எழுதும் இலக்கிய முறையைக் கிறிஸ்தவ நற்செய்தியைப் பற்றிய தம் கருத்தினைப் பரப்ப, சபைகள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்க, சம்பாசனை முறையில் எழுதிப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய படிப்பினைகளின் முக்கியமான கருத்துக்கள் அவரின் திருமடல்களில் விரிவாக, தெளிவாக, ஒழுங்காக எழுதப்பட்டுள்ளன. இதனாலேயே இவரின் திருமடல்கள் "அப்போஸ்தலிக்கத் திருமுகங்கள்" என்றழைக்கப்படுகின்றன. இந்த வகையில் தூய பவுல் எழுதிய திருமுகங்கள் 13 ஆகும். இவற்றிலே 1 தெசலோனிக்கேயர், கலாத்தியர், பிலிப்பியர், 1, 2, கொரிந்தியர், உரோமையர், பிலமோன் போன்றவை இவரின் கைப்பட எழுதப்பட்டவையாகவும், ஏனையவை அவரின் சீடர்களால், அவரின் மரணத்தின் பின்னர் எழுதப்பட்டிருக்கலாம் எனவும் திருவிவிலிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இவரின் இறையியல் சிந்தனையிலே இறையருள், கிறிஸ்துவின் தலைமைத்துவமும், தாழ்ச்சியும், உயிர்ப்பும், மறு வருகையும், குடும்ப வாழ்வும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, சகோதரத்துவமும், ஒற்றுமையும், தூய ஆவியின் கொடைகளும், கனிகளும் போன்ற பல்வேறு பட்ட விடயங்களை மிகவும் ஆழமாகவும் மற்றும் பல்வேறு இறையியல் ஆன்மீகக் கருத்துக்களும் முக்கிய படிப்பினையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் இறையருள் பற்றிய படிப்பினையினை உரோ. 2:12 – 19, 7:7 – 20, கலா. 3:15 – 29 போன்ற வேதப் பகுதியில் காணமுடிகிறது. இவற்றில் இறையருள் ஆனது ஏற்புடைமை அல்லது மீட்பு இறைவன் நமக்குத் தரும் இலவசக் கொடை எனக் குறிப்பிடுகிறார். இவரின் போதனையின் மையக் கருத்தும் இதுவே ஆகும். இறையரசை விளக்கத் தூய பவுல் பயன்படுத்தும் கிரேக்கச் சொல் "காரிஸ்" அதாவது இரக்கம் எனப் பொருள்படும். மீட்பினை விளக்க அவர் பயன்படுத்தும் கிரேக்கச் சொல், "டிகையோசுனே" இது ஒருவர் இறைவனுக்கு ஏற்புடையதைக் குறிக்கிறது. மேலும், இறைவன் திருமுன் நீதியாய் கருதப்படல், இறைவனுடனான நெருங்கிய உறவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய்,
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்"

- எசாயா 63:31

மலர்வு

1942
⁕
9
⁕
29



உதிர்வு

2016
⁕
11
⁕
30


*அன்னையே! எனை ஈன்ற தாயே!*
*பிறந்தநாள் முதல் எனைக் காத்தவரே!*
*இறைவன் எனக்குத் தந்த கொடையாம்*
*உம் பிரிவால் வாடும் உம் மகள்*
*உம் பாவம் மன்னித்து நிலை வாழ்வு*
*தந்திட இறைவனை வேண்டுகிறேன் அம்மா!*

**பிரிவால் வாடும் அன்பு மகள்**
**- டெப்னி மரியா -**

இரட்சணியம் அடைதல், விடுதலை போன்ற பல்வேறு பதங்களைக் குறித்து நிற்கிறது.

வேதாகமத்தில் இறைவன் தம்மை அன்பின் கடவுளாய் வெளிப்படுத்தினார். இறை அன்பின் வெளிப்பாடு கிறிஸ்துவில் பிரதிபலித்தது. இதனால் அவரைச் சிலுவை மரணத்திற்குக் கையளிப்பதிலும் பின் உயிர்த்தெழச் செய்வதிலும் முழுமை பெற்றது. எனவே, கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசம் நம்மை அவரில் ஏற்புடையதாக்கு கிறது. இவ்வேற்புடைமை நமக்குக் கிடைக்கும் இலவசக் கொடை. எனவே, இறையருள் ஆனது விருத்த சேதனத்தாலோ, சட்டத்தாலோ நமக்குக் கிடைப்ப தில்லை. மாறாக, அவரில் கொள்ளும் நம்பிக்கையாலேயே நமக்குக் கிடைக்கிறது என்பதே தூய பவுலின் இறையியல் தத்துவமாகும்.

தூய பவுல் ஆரம்ப நாட்களில் சட்டத்தினை நுணுக்கமாய்க் கடைப்பிடித்தவர். ஆனால், பின்னர் தன்னுடைய நற்செயல்களிலேயே மீட்பு தங்கியுள்ளது என்பதை உணர்ந்து கொண்டார். சட்டத்தால் அல்ல, இறைவனின் இலவசக் கொடையாலேயே தனக்கு மீட்பு கிடைத்ததாய்க் கூறுகிறார். எனவே, இப்போது கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்குவது சட்டத்தினால் அல்ல என்பதை உரோ. 3:12 இல் விளக்குகிறார். இன்னும் இம் மீட்பானது இறைவன் நம்மீது கொண்ட பரிவினாலே கிடைத்தது. இது கடவுளின் கொடை எனவும், எபே. 2:8 – 9 இல் விளக்குகிறார். எனவே, கடவுள் தரும் கொடையினை நாம் ஏற்றுக்கொள்கிறோமே தவிர நாங்களாக இதைனைப் பெறவில்லை. எம்மால் இதனைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது என்பதனையும் வலியுறுத்து கிறார். இவ்வாறு இறையருள் பற்றிய ஆழமான கருத்தினைத் தூய பவுல் தம் மடல்களில் முக்கிய போதனையாக விளக்கியுள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்

ஜனவரி - 2017



- மற்றில்டா இராஜேந்திரம் -

## ஜனவரி 15ந் திகதி : புனித ஐடா —




ஐடா 6வது நூற்றாண்டில் வோட்டர் போர்ட் எனும் நாட்டில் அவதரித்தார். பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தஇவர் சிறு வயதிலேயே தன்னை இறைவனுக்கு அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். லிமெரிக் மாகாணத்திலுள்ள கில்லீடி எனுமிடத்தில் ஒரு கன்னியர் இல்லத்தை ஆரம்பித்துத் தன் வாழ்நாள் முழுவதையும் கழித்தார். இவ்வில்லம் பிற்காலத்தில் சிறுவர்களுக்கான பயிற்சிப் பாடசாலையாகப் புகழ் பெற்றது. இவரது உளவளத்துணை முறையை ஆயர்கள் பார்வையிட்டனர். இவர் வழங்கிய பயிற்சிகளைப் பெற்ற இரு சிறுவர்கள் புனிதர்களாயினர். இவர்கள் பிரெண்டன், மொச்சோய்மொக் ஆவர். ஒருநாள் பிரெண்டன் இவரிடம் இறைவன் விரும்பும் விசேட வழிக்குரிய மூன்று விடயங்களும் யாவை எனக் கேட்டார். அதற்கு ஐடா "தூய உள்ளத்தோடு இறைவனில் கொள்ளும் உண்மையான நம்பிக்கை, சமய ரீதியில் ஆன்மாவின் எளிமையான வாழ்வு, அத்துடன் தருமம் செய்யும் திறந்த கரம்" என்றார். மீண்டும் "எந்த மூன்று விடயங்கள் விசேடமாக இறைவன் முன் அருவருக்கத் தக்கவை" என பிரெண்டன் கேட்க, அவரோ "கோபங்கொண்ட முகம், தவறு செய்வதிலுள்ள வீண் பிடிவாதம், பணத்தின் சக்தியில் கொண்ட கர்வம் நிறைந்த நம்பிக்கை" என்று பதிலிறுத்தார். புனித ஐடா 570ம் வருடம் தைத்திங்கள் பதினைந்தாம் நாளிலே இறைவனுடன் கலந்தார். இவரை "இரண்டாவது புனித பிரிஜிட்" என அழைப்பார்கள். செல்டிக் திருச்சபையின் அதிமகிமை நிறைந்த புனிதையராக இவ்விருவரும் கருதப்படுகின்றனர்.

## டிசம்பர் 29ந் திகதி : புனித அப்பொலினாரிஸ் கிளாடியுஸ்




துருக்கி நாட்டின் மத்திய பகுதியான பிரிகியாவில் வாழ்ந்தவர் அப்பொலினாரிஸ் கிளாடியுஸ், அங்கு ஹிராபோலிஸ் எனுமிடத்தின் ஆயராக ஏறக்குறைய 170 முதல் 180 வரையிலான பத்தாண்டுகள் பணி புரிந்தார். இவர் காலத்தில் நிலவிய தப்பறைக் கொள்கைளுக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டார். தமது கருத்தாழமிக்க போதனையால் எதிரிகளை வாயடைக்கச் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார். சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பதுபோல அவர்களது இடங்களுக்கே சென்று வாதம் நிகழ்த்தி வெற்றிகரமாகத் திரும்பினார். "தப்பறைக் கொள்கையைப் பரப்பும் அனைவரிடமிருந்தும் வரும் கருத்துக்கள் அனைத்தும் கடவுளிடமிருந்து வருவனவல்ல. மாறாகச் சாத்தானிடமிருந்து வருபவைகளே" என்று கொதித்தெழுந்தார். யூதர்களுக்கெதிராக இரு நூல்களை எழுதிப் பரபரப்பூட்டினார். கிறிஸ்தவர்களை எதிர்க்கும் வேற்றினத்தாருக்கு எதிராக ஐந்து நூல்களையெழுதி அவர்களுக்கு அச்சமூட்டினார். 'உண்மை' பற்றி இரு நூல்களை எழுதிய இவர் தமது எழுத்துக்களால் புரட்சி செய்தார். பேரரசர் மார்குஸ் அரெலியாஸ் தான் போரில் வெற்றி பெறச் செபிக்கும்படி அப்பொலினாரிசை வேண்டினார். "கிறிஸ்தவர்களை யாதொரு ஆபத்தும் நெருங்காமல் காத்திடத் ..............

- தொடர் 22ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

- ஆழியோன் -




க. பேரின்பதாசன் அவர்களின் 'நந்தவனச் சுகந்தம்' கவிதைப் பெட்டகமொன்றை இரசிக்கும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. க. பேரின்பதாசன், கந்த பேரின்பம், காவலூர்க் கவிஞன், தீவான் என்று பல புனைப் பெயர்களில் கவிதைகள் படைத்து வருபவர்தான் திரு. கந்தசாமி பேரின்பதாசன்.

ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று உடற்கல்வி ஆசிரியராகப் பரிமாணம் பெற்ற பின்னர் அதிபராக, உடற்கல்வி உதவிப் பணிப்பாளராகச் சேவையாற்றியவர். கல்விப்புலப் பணியில் 30 ஆண்டுகள் மன்னார் மாவட்டத்தில் ஈடுபட்டவர். தமிழ் உணர்வு மிக்கவர். இதனால்தான் என்னவோ, 'மன்னார் தமிழ்ச் சங்கம்' இக் கவிதை நூலை வெளியிட் டுள்ளது.

வெளியீட்டுரையை சிவஸ்ரீ மஹா. தர்மகுமார குருக்கள் (தலைவர் - மன்னார் தமிழ்ச் சங்கம்) எழுதியுள்ளார். கருத்துரையை அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் (முன்னாள் தலைவர் - மன்னார் தமிழ்ச் சங்கம்) அளித்துள்ளார்கள்.

'பொதுவான பாடல்கள்' என்ற தலைப்பில் 19 பாடல்களும், இந்து சமயம் தொடர்பான பாடல்கள் 13, கிறிஸ்தவ சமயப் பாடல்கள் 07, இஸ்லாமிய பாடல்கள் 02, நெஞ்சில் நிறைந்தவை 05, அறிவுரைப் பாடல்கள் 21, தனிப் பாடல்கள் 06, யுத்த அனர்த்தப் பாடல்கள் 11, காதல் பாடல்கள் 04, நகைச் சுவைப் பாடல்கள் 10 என்பனவற்றுடன் திருவிளையாடல் நாடகம் என்பனவாக அழகான வெளியீடாக இப்பத்தகம் வெளிவந்துள்ளது.



அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் ஒரு இடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

இவருடைய கவிதைகளில் பல இடங்களில் சந்தங்கள் அழகாய் அமைந்திருக்கின்றன.

நாட்டுக்கு சுதந்திரம் நாற்பத்தெட்டில்
நமக்கு சுதந்திரம் எந்தமட்டில்?
காட்டிக் கொடுக்கும் கருங்காலிக் கூட்டம்
நாட்டில் இருக்கையில் நமக்கேது சுதந்திரம்?

அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய நூல் இது.

**புனிதர்களை அறிவோம் ....**

... தயாரானால் செபிக்கிறேன்" என்றார் அவர். அவரது நிபந்தனையை ஏற்றுப் பேரரசர் ஒப்புதல் அளித்ததால் மக்கள் அனைவருடனும் இணைந்து செபித்தார். போரில் பேரரசர் வெற்றியும் பெற்றார். "கிறிஸ்தவர்களைச் சமய பேதம் காட்டித் துன்புறுத்தக்கூடாது" என்று பேரரசர் அரசாணை பிறப்பித்தார். ஆயினும், அவரால் ஏற்கனவே இருந்த சட்டங்களை முழுமையாக மாற்றத் தைரியமின்றி இருந்தார். எனவே, தொடர்ந்து கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். அவ்வாறு ஏற்பட்ட மறைக்கலகத்தில் அப்பொலினாரிஸ் கிளாடியுஸ் மறை சாட்சியாகிப் பின் புனிதரும் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலா காலமாக நம் மக்கள் நன்றிப் பண்பினை மறக்காது வாழ்ந்து வருகின்றனர். ஆதியிலேயே கடவுள் தந்த நன்மைகளுக்குப் பலி செலுத்தித் தம் நன்றியுணர்வை வெளிக்காட்டி வந்துள்ளனர். காலப்போக்கில்"'பொங்கல் திருநாள்' எனும் நன்றித் திருநாள் எமது பண்பாடாக அமைந்தது. வயலில் கஷ்டப்பட்டு உழவன் உழைத்த உழைப்பால் நிறைந்த அறுவடை கிடைக்கிறது. அந்த அறுவடையைக் கொடையாகத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தத் தலைப்பட்டவன், சூரியன்தான் இவற்றுக்கெல்லாம் காரணம் என எண்ணினான். எனவே, சூரியனுக்குப் பொங்கல் வைத்து வணங்கி நன்றி செலுத்தினான்.

உலகின் எல்லா இனங்களும் இந்த நன்றியுணர்வை ஏதோ ஒரு வகையில் வெளிக்காட்டியே வந்துள்ளனர். திராவிட நாகரீகத்திலே பல கடவுட் கொள்கையில் வணங்கப்பட்டவற்றில் ஒன்று சூரியன். நமக்கெல்லாம் தெரிய வேண்டிய விடயம். ஆதி மனிதன் வாழ்க்கை நடத்துவதற்குப் பெரிதும் சிரமப்பட வேண்டியிருந்தது. அவனை அவனது சூழலில் இருந்த பல விடயங்கள் ஆட்டிப்படைத்தன. பயங்கொள்ளச் செய்தன. உதாரணமாகக் கூறப்போனால் மழைக்கு இடி மின்னலுக்குப் பயந்து, 'வர்ண பகவான்' எனப் பெயரிட்டு வணங்கித் தம்மைப் பாதுகாக்க வேண்டிக்கொண்டான். சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாமல் அதனைத் தெய்வமாக்கினான். பாம்பினால் பாரிய துன்பங்களை அடைந்தவன் அதனையும் கடவுளாக்கித் தன் பயத்தைப் போக்கப் பலவாறும் முயற்சித்தான் என்றால் அது மிகையாகாது. இவற்றுள் சூரியனுக்குப் பொங்கலிட்டு ஒவ்வொரு புதுவருட ஆரம்பத்திலும் தன் நன்றியினைத் தெரிவித்து மனம் பூரிக்கின்றான்; நிறைவடைகிறான்.




இன்றைய காலகட்டத்திலே கத்தோலிக்கத் திருச்சபையானது "தமிழர் திருநாள்", "உழவர் திருநாள்" என்ற ரீதியில் பொங்கலிட்டு மகிழ்கிறது. ஏனெனில், பொங்கல் என்பது நன்றி கூறும் பெருவிழா. கடந்த வருடம் முழுவதும் காத்துத் தேவையான நன்மைகளைச் செய்த இறையவனுக்கு நாம் நன்றிகூறுகிறோம். அத்துடன் புதுவருடம் முழுவதும் எமது வாழ்வு வளம்பெற வேண்டுகிறோம். எம்மிடையேயும் உழவர்கள் இருக்கின்றனர். எனவே, அவர்கள் அந்த நன்றியைத் தெரிவிக்கவேண்டுமல்லவா?

2ம் வத்திக்கான் திருச்சபையால் வந்த மாற்றங்களுள் ஒன்றாக இது உள்ளது. பொங்கலிட்டு, தோரணங்கள் கட்டி, கோலமிட்டுப் பண்பாட்டுத் திருப்பலியை தமிழ் மணங் கமழ நிறைவேற்றி, நாம் இறைவனுக்கு உளமார நன்றியைத் தெரிவிப்போம். தமிழ்க் கத்தோலிக்கர் என்ற ரீதியில் நாம் இறை தந்தையை வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




..... அதுமட்டுமல்ல, நற்செய்தியில் இரண்டு சந்தர்ப்பங்களில் இயேசுவிடம் அவரது தாய் குறித்து எடுத்துரைக்கப்படுவதைக் காண்கின்றோம். ஒரு சந்தர்ப்பத்தில், அவர் போதித்துக்கொண்டிருந்த இடத்திற்கு அவரது தாய் உறவினர்களோடு தேடி வருகிறார். அவர் பணியில் ஈடுபட்டிருப்பது கண்டு உள்ளே நுழைய முடியாமல் வெளியில் காத்து நிற்பதைக் கண்டவர்கள், இயேசுவிடம் இது குறித்துக் கூறச் செல்கிறார்கள். தன் மகன் போதிக்கிறான் என்கின்ற உரிமையைக் கூட அவள் எடுத்துக் கொள்ள வில்லை. அவர் செய்கின்ற பணி முடியும் வரை காத்திருக்கின்றாள். அதுமட்டுமல்ல, யாரையும் அழைத்து தான் வந்துள்ள சேதியை அவரது செவிகளில் போட்டுவையுங்கள் என்று கூடச் சொல்ல வில்லை. தன் மகன் பணிக்கு இடையூறு தராமல் அவள் வெளியில் நிற்கின்றாள் என்றால், அவள் எந்த அளவுக்கு அவருடைய பணியில் தன்னை விட்டுக் கொடுத்து வாழ்ந்திருந்தாள் என்பது சாதாரண மனித உள்ளங்களால் புரிந்துகொள்ளவா முடியாது?

சேதி இயேசுவிடம் சொல்லப்படுகின்றது. அவர் உடனேசொன்னவர்களிடம் 'யார் என் தாய்? யார் என் சகோதரர்கள்?' எனக் கேட்கின்றார். (லூக். 8:21) இந்தச் சந்தர்ப்பத்தையும் தொடர்ந்து இயேசுதன் வாயாலே தன் தாயை மகிமைப்படுத்தியதையும் நாம் தெளிந்த மனதுடன் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏனென்றால், இந்த வசனங்களைச் சொல்லி நம் நடுவே "பாருங்கள் இயேசுவே தன் தாய் யார் என்று கேட்கிறார். இதுவே மரியாள் அவருடைய தாய் இல்லை என்பதற்குச் சான்று இல்லையா?" என்று உரத்த குரலில் மாரடிக்கின்றவர்கள் உண்டு!

அவர் என்ன கூறுகின்றார்? 'இறை வார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகின்றவர்களே என் தாயும், சகோதரர்களும்.' அதாவது அவர் தன் தாயை மறுதலிக்கவில்லை. தனக்குத் தாய் கிடையாது என்று கூறவில்லை; மாறாகத் தன் தாய் யார் என்பதைப் பிரசித்தம் செய்கின்றார். ஆம்! என் தாய் இறைசித்தத்தை ஏற்று அதன்படி வாழ்பவள் என்று அவர் அவளைப் பன் மடங்கு உயர்த்துகின்றார். ஆம்; மனித மீட்பின் வரலாற்றில், முதல் பெண்ணாகத் தனக்கு என்ன நேருமோவென்ற அச்சத்தை முற்றிலும் களைந்தவளாகத் தன்னை இறைவார்த்தக்கு அடிமையாக்கி, 'உமது வார்த்தை யின்படியே ஆகட்டும்' என்று தன்னை ஒப்படைத்து அந்தநாள்வரை இறைசித்தத்தின்படி வாழ்கின்றவள். அப்படிப்பட்டவள் தான் தன் தாய் என்பதை அவர் பகிரங்கமாக எடுத்துக் கூறுகிறார். இது மட்டுமல்ல, ஆலயத்தில் அவரது போதனைகளையும், அற்புதங்களையும் கண்ட ஒருபெண் பரவசப்பட்டவளாக, 'இப்படிப்பட்ட ஒரு உன்னதமான மகனைப் பெற்றெடுத்தவள் ஒரு பாக்கியசாலியேதான்' என்பதைத் தன் தாய்மைக்குரிய மனதால் உணர்ந்தவளாக நெஞ்சார அந்தத் தாயை வாழ்த்தி நிற்கின்றாள். உம்மைச் சுமந்த உதரமும், நீர் அமுதுண்ட மார்பும் பேறுபெற்றவைகள்' என்கின்றாள். ஒரு தாயுள்ளம் இன்னுமொரு தாய் பெற்ற பேற்றினை எண்ணிப் புளகாங்கிதமடைந்து உதிர்த்த வார்த்தைகள் இவை! ஓர் உத்தமனான பிள்ளையைக் காணும் எந்தத் தாயும் – எந்த நல்லிதயம் கொண்ட தாயும் – தன் வயிற்றில் அப்படியொரு குழந்தை பிறந்திருக்கக் கூடாதா என்று ஏங்குவது தாயன்பின் வெளிப்பாடு. இந்தப் புகழுரையைக் கேட்ட மாத்திரத்தில் இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் கடிந்து கொள்ளவில்லை. 'நீங்கள் என்ன கூறுகிறீர்கள். மானுட மகன் எனக்கு ஒரு தாயா?' என்று கேட்கவில்லை. அந்தப் பெண் கூறியதை இழிவு படுத்தவில்லை. மாறாக, தன் தாய் எத்தனை பாக்கிய சாலி என்பதை உலகறியச் சொல்லுகிறார். 'கடவுளின் சித்தப்படி வாழ்பவர்கள் இதிலும் பேறுபெற்றோராக முடியும்.' என்ற அவரது வார்த்தைகளின் தார்ப்பரி யத்தை திரிபுபடுத்தி மரியாள் பேறுடைத்தவளில்லை என்கின்ற அறிவிலிகள் தாயன்பை மதிக்காதவர்கள் என்றுதான் கூற வேண்டும். அவர் என்ன சொல்கின் றார்? "இறை சித்தத்தின்படி வாழ்பவள் தான் என் தாய். அப்படிப்பட்ட ஒருத்தி தான் மனுமகனுக்குத் தாயாக இருக்க முடியும். நீங்களும் அப்படி வாழ்வதாயி ருந்தால் நீங்களும் என் தாயின் அந்தஸ்திற்கு உயர லாம்" என்பதை உணர்த்தியே இந்த வார்த்தைகளை உதிர்க்கிறார். எனவே, இந்த இரு சந்தர்ப்பங்களிலும் இயேசு மரியாளை மறுதலிக்கவில்லை. அவமரி யாதை பண்ணவில்லை. மாறாக அவளைப் பன் மடங்கு உயர்த்தி வைக்கவே செய்கின்றார்.

இதுமட்டுமல்ல, மரியன்னையின் புகழ் பொறுக்க முடியாமல், இயேசுவைத் தவிர அவருக்கு வேறுபிள்ளைகள் இருந்ததாகக் கதையளப்பது முண்டு. நம்மத்தியில் வாழுகின்ற இலட்சக்கணக்கான பெண்கள் தம் இளவயதிலே கணவனை இழந்துவிட வில்லையா? அந்த இன்பமான வாழ்வை எண்ணி ஏங்கியவர்களாகக் கணவன் மறைந்ததும் வேறு துணைகளை அவர்கள் தேடிக்கொள்ளாமல் கடைசி வரை தம் பிள்ளைகளுக்காக. மறைந்த கணவனின் அன்பை எண்ணி வாழ்ந்ததில்லையா? இறை மகனையே தன் வயிற்றில் இறை அருளால் பெற்றுக் கொண்டவளுக்கு ஒரு கணவனின் உறவு தேவைப் படும் என்பது அபத்தமானதாகத் தெரியவில்லையா? நம் மத்தியில் செயற்படுகின்ற தேவ அழைத்தலைப் பெற்றுக்கொண்டு சந்நியாச வாழ்வைக் கடைப்பிடிக் கும் எத்தனையோ சங்கைக்குரிய சகோதரிகளை நாம் காணுகின்றோம், அவர்களது தவ வாழ்வின் பொருட்டு அவர்களில் பலரை நாம் மரியாதை செய்கின்றோம். அவர்களில் பலர் புனிதைகளாக உயர்த்தப்பட்டுமிருக்கிறார்கள். அவர்கள் இறைவனின் அருளோடு அவர் பிரசன்னத்தில் வாழவில்லையா? நாம் ஏற்கின்றோமோ இல்லயோ, இயேசு இவ்வுலகின் மீட்பர்! அந்த இயேசுவின் தாய் மரியாள்!! எனவே, மீட்பரின் தாய் மரியாள்தான். நம் வீடுகளில் ஒரு மங்களகரமான நிகழ்வு என்றால் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து புனிதமாக்குவோமா இல்லையா? புனிதமான இறைவனைச் சுமந்து பெற்று பாலூட்டி வளர்த்த ஒரு தாயை எந்தளவுக்கு இறைவன் புனிதமாகக் காப்பார் என்பதை நாம் மனதில் எண்ணி வாழவேண்டும்.

முஸ்லிம் மக்களின் பைபிளாக விளங்கு கின்ற திருக் குர் ஆனில் 114 அத்தியாயங்கள். அதில் 6666 வசனங்கள் அடக்கம். அவற்றுள் நான்கே நான்கு இடங்களில் மட்டும் நபிகள் நாயகத்தைப் பற்றி (இறைத் தூதர்) குறிப்பிடப்படுகிறது. ஆனால் ஈசா நபி என்று கடவுளின் மகனாக அவர்கள் காணும் இயேசு வைப் பற்றியோ மொத்தம் 254 இடங்களில் குறிப் பிடப்படுகின்றது என்கிறார்கள். அதுமட்டுமல்ல, நபிகள் நாயத்தின் தாயைப் பற்றியோ, அவரது மனைவி பற்றியோ அல்லது அவர் சம்பந்தப்பட்ட பெண்களைப் பற்றியோ எந்த ஒரு இடத்திலும் கூறப் படவில்லை. மாறாக மிரியம் அல்லது மரியாளைப் பற்றி, அவளது குடும்பத்தைப் பற்றி 3 ஆம் அதிகார மும், மரியாளைப் பற்றி மட்டும் எடுத்துரைக்கின்ற 19 ஆம் அதிகாரமும் அதில் இருக்கின்றது. மேலும் மூன்றாம் அதிகாரம் 34 ஆம் வசனத்தில் அவள் பாவமின்றிப் பிறந்தவள் (அமல உற்பவம்) என்றும், வாழ்வில் பாவம் புரியாதவள் என்றும், வாழ் நாளெல் லாம் கன்னியானவள் என்றும் எடுத்துக் கூறப் படுகின்றது. அதிகாரம் 50: 23 ஆம் வசனம் அவள் உடலோடுவிண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டவள் என்கிறது (மோட்ச ஆரோபணி).

ஈசா நபியாகிய இயேசுநாதர் குறித்து 10 விடயங்கள் 3: 45-55 வரை எடுத்துக் கூறுகின்றன. அவற்றுள் முக்கியமாக,அவர் வார்த்தையான கடவுள், கடவுளின் ஆவியானவர், அவர் இயேசுக் கிறிஸ்து வானவர். பிறந்த இரண்டாம் நாளில் அவர் பேசத் தொடங்கினார். களி மண்ணினால் பறவைகள் செய்து அவற்றில் ஆவியை ஊதி உயிர் கொடுத்துப் பறக்கச் செய்தார். பார்வையற்றோர் பார்வைபெறச் செய்தார். தொழுநோயாளிகளைக் குணம் பெறவைத்தார். இறந்தோரை உயிர்ப்பித்தார். வானகம் சென்று உயிர்வாழும் அவர் மீண்டும் வருவார் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது (அதி.10:94).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை




**யார் பிச்சைக்காரன் :**

யார் பிச்சைக்காரன் என்பதில் ஓர் அறிஞர் தீர்ப்புச் சொல்ல வேண்டியிருந்தது. அவர் தெளிவாகச் சொன்னார். "பிச்சை எடுப்பவனை எல்லாம் பிச்சைக்காரன் என்று சொல்ல முடியாது. சராசரியான பிச்சைக்காரன் ஒருவனின் வாழ்க்கையை முதலில் பாருங்கள். மூன்று அம்சங்கள் தெரியும். முதலாவதாக எது நடக்கவேண்டும் என்பது அவன் கட்டுப்பாட்டில் இல்லை. இரண்டாவது அவன் விரும்புவது அவனுக்குக் கிடைப்பதில்லை. மூன்றாவது அவன் விரும்புவது கிடைத்தாலும் தேவையான அளவுகளில் கிடைப்பதில்லை. இந்த மூன்று குறைகள் எவனுக்கு ஏற்பட்டாலும், அவன் பிச்சைக்காரன்-தான். இந்தக் குறைகள் இல்லையென்றால் ஒரு பிச்சைக்காரன் கூட பணக்காரன்தான்."

**அதிர்ச்சி வைத்தியம்.....**

அந்த மனிதருக்கு நண்பர்கள் உண்டு. ஆனால், அவர்கள் சொல்வதை அவர் கேட்பதில்லை. புதிதாக வீடு கட்டியிருந்தார். புதுமனை புகுவிழாவிற்கு நண்பர்களை அழைத்திருந்தார். எல்லா நண்பர்களுமே அந்த மனிதரின் அழகிய புகைப்படம் ஒன்றைப் பெரிதாக்கிச் சட்டமிட்டு அன்பளிப்பாக ஆளுக்கொன்றை அளித்தார்கள். காரணம் கேட்டபோது நண்பர்கள் சொன்னார்கள். "உனக்கு நிலைக் கண்ணாடியைப் பரிசளிக்க நினைத்தோம். ஆனால் உள்ளதை உள்ளபடி காட்டுவது உனக்குப் பிடிக்காது. எனவே, புகைப் படங்களைப் பரிசளித்துவிட்டு, உன் வீட்டிலுள்ள கண்ணாடிகளைக் கழற்றிச் செல்லத் தீர்மானித்தோம். கற்பனை உலகில் உண்மைகளை எதிர்கொள்ளாமல் உன் விருப்பம்போல் வாழலாம்" என்றார்கள். அதிர்ச்சி வைத்தியம் பயனளித்தது. விமர்சனங்களை ஏற்கத் தொடங்கினார் அவர்.

- ஜே.எச்.இரத்தினராஜா -

இத்தகைய சிறப்பானவரின் தாய் மரியாள் என்பதை குர் ஆன் அறுதியிட்டுக் கூறுகிறது. அவர்களும் ஆபிரகாமின் வழி வந்தவர்களே. ஆபிரகாமின் மூத்த புதல்வன், எகிப்திய அடிமைப் பெண்ணின் மூலம் கிடைத்த, இறைவனால் கடற்கரை மணலைப் போலவும், வான் நட்சத்திரங்களைப் போலவும் பலுகச் செய்வேன் என்று ஆசீர்வதிக்கப்பட்ட இஸ்மாயேலின் வழித் தோன்றல்கள்தான். ஆனால் நம்மவர்கள்? அதே ஆபிரகாமின் இரண்டாம் புதல்வன் யாக்கோபின் வழி வந்த இயேசுவின் மறு பிறவிகள் என்று அழைத்துக் கொள்பவர்களல்லவா?

(தொடரும் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூத்து 1:1-22

163



திருவிவிலியக் கற்றல்

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.01.2017

(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக).

1. நீதித்தலைவர்கள் ஆட்சியாளராய் இருந்த காலத்தில் நாட்டில் ஒரு கொடிய ...................... உண்டானதால், யூதாவின் பெத்லகேமில் இருந்து ஒருவர் தம் மனைவியுடனும், மைந்தர் இருவருடனும் மோவாபுக்குச் சென்றார்.

   அ) புயல் ஆ) கோடை இ) பஞ்சம்

2. அவர் பெயர் எலிமலேக்கு: மனைவி நகோமி, மைந்தர் மக்லோன், கிலியோன் ஆகியோர் யூதாவிலிருந்த பெத்லகேமைச் சார்ந்த ...................... குடியினர், மோவாபில் வாழ்ந்து வந்தனர்.

   அ) எப்ராத்து ஆ) மோவாபு இ) யூதா

3. அங்கு அபிமலேக்கு இறக்க, நகோமி துணையற்றவரானபோது, இரு மகன்களும் மோவாபுப் பெண்களான ஓர்பா, ...................... ஆகிய பத்தாண்டுகளுக்கு முன் பிழைக்க வந்தவர்களை மணந்து கொண்டனர்.

   அ) மாரா ஆ) ரூத்து இ) ராக்கேல்

4. இரு மகன்களும் இறந்துபோகத் தனித்துப் போன நகோமி, தன் சொந்த நாட்டில் ஆண்டவர் உணவு கிடைக்கச் செய்தார் எனக் கேள்விப்பட்டு ...................... விட்டுப் போக ஏற்பாடு செய்தார்.

   அ) மோவாபை ஆ) பெத்லகேமை இ) யூதாவை

5. புறப்பட்டுப் பயணமானபோது, நகோமி மருமகள்களிடம் "உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிச் செல்லுங்கள். ஆண்டவர் உங்களுக்குப் பரிவு காட்டுவாராக. நீங்கள் மீண்டும் ...................... செய்து வாழ ஆண்டவர் அருள்புரிவாராக" என்றார்.

   அ) திருமணம் ஆ) மணம் இ) கலியாணம்

6. அவர்களோ கதறி அழுது, "இல்லையம்மா, நாங்கள் உம்மோடு வந்து, உம்முடைய இனத்தவரிடையே இருப்போம்" என்று கூற நகோமி "நீங்கள் செல்லுங்கள்; என்னோடு வருவதால் உங்களுக்கு ...................... என்ன?" என்றார்.

   அ) நன்மை ஆ) இலாபம் இ) பயன்

7. அவர் கூறியவற்றைக் கேட்டு மீண்டும் அழுது ஓர்பா தம் மாமியாருக்கு முத்தம் கொடுத்துவிட்டுத் திரும்பிச் செல்ல, ரூத்தோ ...................... போக மறுத்துவிட்டார்.

   அ) தன்வீடு ஆ) வேறாக இ) பிரிந்து

8. நகோமி ரூத்திடம் "உன் ஓரகத்தி திரும்பிப்போனது போல நீயும் போ" என்றதற்கு அவள் "நீர் செல்லும் இடத்திற்கே நானும் வருவேன். நீர் எங்கு இறப்பீரோ அங்கேயே நானும் ...................... . பிறந்தால் ஆண்டவர் என்னைத் தண்டிப்பார்" என்றார்.

   அ) இறப்பேன் ஆ) இருப்பேன் இ) செல்வேன்

9. அவர்கள் இருவரும் பெத்லகேம் வந்ததும், ஊர்ப்பெண்கள் "இவள் நகோமிதானே" எனப் பேசிக்கொண்டபோது நகோமி, "என்னை ...................... என அழையுங்கள். நிறைவுடன் சென்றேன். வெறுமையாய்த் திரும்பியுள்ளேன்" என்றார்.

   அ) மாரா ஆ) ஓர்பா இ) எஸ்தர்

10. இவ்வாறு நகோமியும், அவரின் மருமகளான மோவாபியப் பெண் ரூத்தும் பெத்லகேம் ஊர் வந்து சேர்ந்தபோது அங்கு ...................... அறுவடை தொடங்கியிருந்தது.

   அ) கோதுமை ஆ) வாற்கோதுமை இ) திராட்சை

[வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் – 163

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின்
கீழ்க் கோடிடுக)

1. எதிர்க்கட்சி இல்லாத பாராளுமன்றம் உள்ள நாடு:
   (சிங்கப்பூர் - தாய்லாந்து - சீயம்)

2. நூற்றெண்பத்தெட்டு நாடுகளின் தேசிய கீதங்களைப் பாடிச் சாதனை படைத்தவர் :
   (மைக்கல் ஜக்சன் - மைக்கல் சாசுர் - லிண்டன் ஜக்சன்)

3. கிறிஸ்துவை ஆரம்பத்தில் மெசியாவாக ஏற்க மறுத்தவர்கள் :
   (புற இனத்தவர் - யூதர் - பரிசேயர்)

4. புற்றுநோய் குணமாக அடிக்கடி பயன்படுத்தக்கூடிய மூலிகை என நிரூபிக்கப்பட்டது:
   (கொத்தமல்லி - அறுகம்புல் - வல்லாரை)

5. 'செத்த நாய் திரும்ப ..............................'
   (கடியாது - எழும்பாது - துரத்தாது)

6. வினைப்பகுபதத்திற்கு உதாரணம் :
   (தொழிலாளி - கற்றான் - மலர்கள்)

பெயர் : ..............................................................................................

முகவரி : ..............................................................................................

..............................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 163
தொண்டன்
அ. பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 161 விடைகள்

பெத்தேலுக்கும், பால்தாமாரில், பத்தாயிரம், இஸ்ரயேல், பெரும்புகை, பாலைநில, கால்நடைகளையும், வீரர்கள், பலிபீடம்.

## அறிவை வளர்ப்போம் - 161 விடைகள்

1. அமெரிக்கா
2. ஆப்கானிஸ்தான்
3. கெலன் கெல்லர்
4. திருத்தந்தை பிரான்சிஸ்
5. மாளும்
6. பதம்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி I ம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்**

- K. அனோமிக்கா,
  6/50, சொறிக்கல்முனை,
  சம்மாந்துறை.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்**

- G. R. சகான்,
  311, நீதிமன்ற வீதி,
  திருகோணமலை.
- சுரேஸ் மொறின் ஜெலோஷன்,
  6/52, சொறிக்கல்முனை - 03,
  சம்மாந்துறை.
- ஜெயராஜ் ஜீன் ஜெனிஷா,
  95/2, பாடசாலை வீதி,
  ஜெயந்திபுரம்,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 113 முடிவுகள்**

**முதலாம் பரிசு - 400/=**

T. ஞான பிரதாப்,
புனித சூசையப்பர் சிறிய குருமடம்,
விமான நிலைய வீதி,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு - 300/=**

கிறிஸ்ரியன்சன் நிருசன்,
இராமநாதன் கலட்டி கோப்பாய்,
தெற்கு கோப்பாய்.

**மூன்றாம் பரிசு - 200/=**

J. மெலனி,
135, லேடி மெனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுநகர் மறைமாநில ஆயரின் பெற்றோருக்கு

# எமது நினைவஞ்சலி



## வருடங்கள் பலவாயினும் நீங்காது நினைவுகள்

அன்னை

**மரிய பூரணம்**

(26 வருட நினைவஞ்சலி)

தந்தை

**மத்தேஸ் பொன்னையா**

(25 வருட நினைவஞ்சலி)



உலகில் உண்மையாய் வாழ்ந்து
இல்லறத்தில் இன்புற்று ஈன்றெடுத்த
மழலைச் செல்வங்களை
இல்லத் திருச்சபையைக் கட்டவும் - மேலாக
மறைமாநிலத் திருச்சபைதனை வழிநடத்த
ஆயர் என்றும் போதகர் என்றும்
அருட்சகோதரி என்றும் பரிசாகத் தந்து
விண்ணுலக வாழ்வைச் சுவீகரித்த - எமது
அன்புப் பெற்றோரே! உமை எமக்களித்த இறைவனுக்கு
நன்றி கூறி செபத்திலும் நினைவுகூருகின்றோம்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org